Contact : multi printers, Eravur. Tel : 077 050 9619

2021ம் ஆண்டு நவம்பர் மாதம் தரம்5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான,

அறிவுத்தாரகை வெளியீடு,

கடந்தகால நுண்ணறிவு வினாக்கள் – 395(விடைகளுடன்)

ஆசிரியர் : ஏ.எம்.சனூஸ்

(அறிவுத்தாரகை வினாத்தாள் ஆசிரியர்)

Name : .....

School : .....

Year : .....

www.lkedu.lk





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை

5

செயலட்டை - 01

சுட்டெண் : ..... 30 நிமிடம்

● **01, 02** ஆகிய வினாக்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. விளக்கிற்கும் மெழுகுவர்த்திக்கும் ஒளி போன்று புத்தகத்திற்கும் சஞ்சிகைக்கும் .....

(1) அறிவு (2) வாசிப்பு (3) பார்வை

02. வாளுக்கும் சுத்தியலுக்கும் சீவுளிக்கும் தச்சன் போன்று அரிவாளுக்கும் மண்வெட்டிக்கும் கலப்பைக்கும் .....

(1) மீனவன் (2) மேசன் (3) விவசாயி

● **03, 04** ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ளவற்றில் மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறொரு கூட்டமாகவும் வேறுபடுத்தலாம். அவ்விரு கூட்டங்களையும் சேராதது எது?

03. ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, ஜூன், ...

(1) பெப்ரவரி (2) ஏப்ரல் (3) ஜூன்

04. லீற்றர், மீற்றர், கிலோகிராம், கிராம், சென்ரிமீற்றர், ...


(1) மீற்றர் (2) லீற்றர் (3) கிராம்

05. வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

உரல் : உலக்கை எனின், வள்ளம் : .....

(1) துடுப்பு (2) படகு (3) நீர்

06. ஓர் உணவுப் பொருள் சுற்றப்பட்டுள்ள பொதித்தாளில் உள்ள சுட்டுத்துண்டின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது. சுட்டுத்துண்டுக்கு ஏற்ப ①, ②, ஆகியனவாக இருக்கத்தக்கன முறையே,



(1) உற்பத்தி செய்த திகதியும் சந்தைக்கு வழங்கப்பட்ட திகதியும்

(2) சந்தைக்கு வழங்கப்பட்ட திகதியும் காலாவதியாகும் திகதியும்

(3) உற்பத்தி செய்த திகதியும் காலாவதியாகும் திகதியும்

07. 2000.05.01 ஆந் திகதி இலங்கையில் பிறந்த ஒருவர் 2020.06.01 ஆந் திகதி வரை சூரியனைச் சுற்றிப் பயணம் செய்துள்ள முழுச் சுற்றுகளின் எண்ணிக்கை யாது?

(1) 16 (2) 20 (3) 21

www.ikedu.lk

● ஒரு சிறிய சந்தையில் உள்ள விற்பனைக் கூடங்களின் மாதிரிப்படம் கீழே காட்டப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு கொண்டு **08, 09** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

சிறிய சந்தை - 2020			
① உலர் உணவுப் பொருள்கள்	② மரக்கறி	③ பழங்களும் கீரை வகைகளும்	④ பூக்கன்றுகள்

08. சீனி, வல்லாரை, வாழைப்பழம் ஆகியவற்றை வாங்குவதற்குச் செல்ல வேண்டிய விற்பனைக் கூடங்களின் எண்கள் யாவை?

(1) ①, ② ஆகியன (2) ①, ③ ஆகியன (3) ②, ③ ஆகியன

09. தராசு பயன்படுத்தப்படாத கூடமாக இருக்கத்தக்கது யாது?

(1) ① (2) ③ (3) ④

● தரப்பட்டுள்ளவற்றிடையே மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறொரு கூட்டமாகவும் ஆக்கலாம். அவற்றில் இரண்டு இருக்கும் கூட்டத்திற்கு உரியவை யாவை?

10. பத்திரிகை, பாடசாலை, சஞ்சிகை, நூலகம், புத்தகம்

(1) பாடசாலையும் புத்தகமும்
(2) புத்தகமும் நூலகமும்
(3) நூலகமும் பாடசாலையும்

11. மாம்பழம், பணியாரம், அன்னாசி, பாற்சோறு, வாழைப்பழம்

(1) பாற்சோறும் வாழைப்பழமும்
(2) வாழைப்பழமும் பணியாரமும்
(3) பணியாரமும் பாற்சோறும்

● A இற்கும் B இற்கும் பதிலாக மிகப் பொருத்தமான சொற்சோடியைத் தெரிவு செய்க.

12.

காய்கறி	பழம்	A
B	மாம்பழம்	அரிசி
பாகற்காய்	வாழைப்பழம்	பயறு

(1) தானியம், கரட்
(2) சோளம், புடோல்
(3) வாசனைச்சரக்கு, கறுவா

13.

A	கப்பல்	ஆகாயவிமானம்
குதிரை	திமிங்கிலம்	B

(1) வண்டி, பருந்து
(2) சைக்கிள், பட்டம்
(3) கிளி, லொறி

● வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

14. அம்மா காய்கறிகளைக் கொண்டு வருவதற்குச் சந்தைக்குச் சென்றார். பிள்ளைகள் கற்பதற்கு பாடசாலைக்குச் சென்றனர்.

அம்மா : பிள்ளைகள் எனின், சந்தைக்கு : .....

(1) காய்கறிகள் (2) பாடசாலைக்கு (3) கற்பதற்கு

www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 02

சுட்டெண் : ..... 30 நிமிடம்

15. நல்ல பிள்ளைகள் ஆசிரியரின் வார்த்தைகளைச் செவிமடுக்கின்றனர். பிரசித்திபெற்ற பாடகர் இனிமையான குரலில் பாட்டுப் பாடினார்.

பிள்ளைகள் : பாடகர் எனின், செவிமடுக்கின்றனர் : .....

(1) குரலில் (2) பாட்டு (3) பாடினார்

16. வெற்றியினால் ..... அடைந்த இரசிகர்கள் .....

(1) மகிழ்ச்சி - கைதட்டினர்

(2) களைப்பு - வாழ்த்தினர்

(3) இன்பம் - கண்ணீர் விட்டனர்

● அட்டவணையில் உள்ள தகவல்களுக்கேற்ப விடை எழுதுக.

நாள்	ஜனவரி 31	பெப்ரவரி 28	மார்ச் 31	ஏப்ரல் 30	மே 31
எண்ணிக்கை	31	59	.....	120	151

17. மார்ச் 31 ஆந் திகதிக்குப் பொருத்தமான எண் யாது?

(1) 89 (2) 87 (3) 90

18. எண் 100 இற்குப் பொருத்தமான திகதி யாது?

(1) ஏப்ரல் 01 (2) ஏப்ரல் 10 (3) ஏப்ரல் 20

19. பின்வரும் பந்தியில் உள்ள வெற்றிடங்களுக்கு மிகவும் பொருத்தமான சொல்லை அடைப்புக்குறிகளிலிருந்து தெரிவு செய்து வெற்றிடங்களை நிரப்புக.

ஒருவர் தமது நண்பருடன் ஒரு காட்டின் நடுவே செல்லும் போது ஒரு பயங்கரமான புலி முன்னால் வருவதைக் கண்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஒரு மரத்தில் ஏறினார். மற்றையவர் மரத்தில் ஏறுவதற்கு ..... (விருப்பம் / பழக்கம் / நாட்டம்) இல்லாமையால் இறந்தவர் போல நிலத்தில் ..... (படுத்துக் கிடந்தார் / விழுந்தார் / அமர்ந்தார்)

● **20, 21** ஆம் வினாக்களில் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

20. மீனவனுக்குக் கடல் போன்று விளையாடுபவனுக்கு .....

(1) மைதானம் (2) பந்து (3) துடுப்பு

21. ஆசிரியருக்கு மாணவன் போன்று மருத்துவருக்கு .....

(1) பொதுமக்கள் (2) நோயாளி (3) தாதி

22. ஒவ்வொரு பாத்தியிலும் ஒருவகை மாத்திரம் இருக்கத்தக்கதாக 5 பாத்திகளில் மரக்கறிப் பயிர்களும் பூச்செடிகளும் வளர்க்கப்படுகின்றன. பூச்செடிகள் வளர்க்கப்படும் பாத்திகளின் எண்ணிக்கை இரண்டு ஆகும். மரக்கறிப் பயிர்களும் பூச்செடிகளும் இருக்கத்தக்க விதத்தைத் தெரிவு செய்க.

www.lkedu.lk

(1) றோசா, செவ்வந்தி, முள்ளங்கி, அவரை, கோவா
(2) றோசா, செவ்வந்தி, அந்தூரியம், முள்ளங்கி, அவரை
(3) றோசா, முள்ளங்கி, அவரை, கோவா, கரட்

● **23** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் பின்வரும் பந்தியில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதனுடன் தொடர்புபட்டவை. வெற்றிடங்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையை அடைப்புக்களிலிருந்து தெரிவு செய்க.

நிமலன் இசையில் மிகுந்த விருப்பத்தைக் கொண்டுள்ளான். ஆகவே பெற்றோர்கள் அவனை அதற்காக **23.** ..... (1. பயிற்சியளிப்பதற்கு 2. உற்சாகப்படுத்துவதற்கு 3. வழிப்படுத்துவதற்கு) இசை வகுப்பிற்கு அனுப்பினர். நிமலன் மிகவும் விருப்பத்துடன் வகுப்பிற்குத் தவறாமல் சென்று வயலின் **24.** ..... (1. பாட 2. வாசிக்க 3. அடிக்க) நன்றாகக் கற்றான். அவனுடைய பெற்றோர் தமது மகனைப் பற்றி மிகவும் **25.** ..... (1. மகிழ்ச்சி 2. கவலை 3. இரக்கம்) அடைந்தனர்.

● **26** ஆம் **27** ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களை வாக்கியங்களில் எவ்விதத்தில் பயன்படுத்தலாம் என்பதைக் குறிக்கும் விடையின் கீழே கோடிடுக.

26. பருத்த, நிறைந்த, அழகிய
(1) அடைமொழியாக (2) பெயர்ச்சொல்லாக (3) வினைமுற்றாக

27. பாடுக, ஓடியது, சிரித்தான்
(1) அடைமொழியாக (2) பெயர்ச்சொல்லாக (3) வினைமுற்றாக

28. பசி : உணவு எனின் நோய் : .....
(1) வைத்தியர் (2) மருந்து (3) ஓய்வு

29. வெளிச்சம் : நிழல் எனின் ..... : வெள்ளம்
(1) மழை (2) உதவி (3) படகு

● **30** முதல் **35** வரையுள்ள வினாக்களின் வெற்றிடங்களுக்கு நன்கு பொருந்தக்கூடிய சொல்லின் கீழே கோடிடுக.

மிகவும் .....30..... மரணமடைந்த .....31..... நிலை எல்லோரின் மனதையும் .....32..... வைத்தது.

30. (1) கவர்ச்சியாக
(2) கவலைக்கிடமாக
(3) மகிழ்ச்சியாக

31. (1) பிச்சைக்காரனின்
(2) குழந்தையின்
(3) நாட்டியக்காரனின்

32. (1) கலங்க
(2) நடுங்க
(3) வியக்க

.....33..... காட்டின் மத்தியில் பயணம் சென்ற .....34..... தனக்கு .....35..... வந்த கரடியை நோக்கித் துப்பாகியால் குறி வைத்தான்.

33. (1) பெரிய
(2) அகன்ற
(3) செழுமையான

34. (1) சங்கீதவித்துவான்
(2) வேட்டைக்காரன்
(3) தூதுவன்

35. (1) நேருக்கு நேராக
(2) எதிரெதிராக
(3) நிழலின் கீழ்

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 03

சுட்டெண் : ..... 30 நிமிடம்

● **36** ஆம் **37** ஆம் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் ஆரம்பம் முதல் இறுதி வரையான 5 நிலைகளைப் படிமுறையில் காட்டும் ஒரு விடை உள்ளது. அச்சரியான விடையைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

36. (1) செடி → மரம் → விதை → பூ → காய்
(2) விதை → செடி → மரம் → காய் → பூ
(3) விதை → செடி → மரம் → பூ → காய்
(.....)

37. (1) நெற்பயிர் → நெல் → அரிசி → மா → பலகாரம்
(2) தேங்காய் → தேங்காய்ப்பால் → தேங்காய்ப்பூ → வினாகிரி → அச்சாறு
(3) சீமெந்து → பூச்சாடி → பூ → பழம் → பணம்
(.....)

38. வைத்தியர் வைத்தியம் பார்க்க வைத்தியசாலைக்குச் சென்றார். வேடன் வேட்டையாட காட்டுக்குச் சென்றான்.
வைத்தியர் : வேடன் எனின் வைத்தியசாலைக்கு : .....
(1) வைத்தியம் (2) வேட்டையாட (3) காட்டுக்கு

● பின்வரும் கவிதையை வாசித்து **39, 40** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

மனதில் உறுதி வேண்டும்
உடலில் வலிமை வேண்டும்
சோம்பலை விலக்கிட வேண்டும்
நாட்டுக்கு உழைக்க வேண்டும்

39. இக்கவிதை தரும் முழுமையான செய்தி யாது?
(1) சோம்பலை அகற்றிடுக. (2) கடுமையாக வேலை செய்திடுக.
(3) நாட்டுக்குப் பெறுமதியுடையவனாகுக.

40. இக்கவிதையின் படி நாட்டுக்காக உழைக்கும் ஒருவரிடம் இருக்கத்தக்க இரு இயல்புகளாவன.
(1) மனதில் உறுதியும் வேலையில் சோம்பலின்மையும்
(2) மனதை முன்னேற்றுதலும் உடலை வளர்த்தலும்
(3) மனதை உறுதிப்படுத்தலும் உடலை வளர்த்தலும்

41. மரம் இல்லையேல் நீர் இல்லை - நீர் இல்லையேல் நாம் இல்லை
புவியில் மரங்களைக் காக்கும் - கடமை இருப்பது எமது கையில்
இக்கவிதை தரும் **முழுமையான** கருத்தாவது,
(1) நீர் வளத்தைப் பாதுகாக்க வேண்டும். (2) நீர் இல்லாத போது மரங்கள் இல்லாது போகும்.
(3) காட்டு வளத்தைக் காக்க வேண்டும்.

www.lkedu.lk

42. ஒரு கவிதையில் நான்கு வரிகள் மாற்றி எழுதப்பட்ட விதம் கீழே தரப்பட்டுள்ளது.

A - கடைப்பிடித்து நடந்திடின்

B - சத்தியந் தான் வென்றிடும்

C - காந்தி சொன்ன வழிகளைக்

D - சாந்தி எங்கும் நிலவிடும்

கருத்துள்ள கவிதை கிடைக்குமாறு பொருத்தமாக்கும் போது அவ்வரிகளின் சரியான முறை,

(1) B, D, A, C (2) C, A, D, B (3) D, C, B, A

- **43, 44** ஆகிய வினாக்களில் உரிய முறையில் சொற்கள் பிரித்து எழுதப்படாத வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன. அவ்வாக்கியங்களிலுள்ள சொற்களை உரிய முறையில் பிரித்துக் கருத்துள்ள வாக்கியங்களாக்கி எழுதுக.

43. மரப் பல கைகளைவா கனத்தில் ஏற்றிச்செல் கின்றனர்.

: .....

44. நண்பர் கள்தே நீர் விரு ந் தில்க லந்து கொண்டனர்.

: .....

- பின்வரும் பந்தியில் இரண்டு பகுதிகள் வெட்டி நீக்கப்பட்டுள்ளன. அவ்வாறு வெட்டி நீக்கப்பட்ட இரண்டு பகுதிகளையும் தெரிவு செய்து **45** ஆம் **46** ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.

வண்ணத்துப்பூச்சி கூறத் தொடங்கியது. நாங்கள் பூக்களில் உள்ள தேனைக் குடிப்பவர்கள். எங்கள் A மிகவும் பெரியது. அழகிய நந்தவனமே எங்கள் இருப்பிடம். நாங்கள் ஒற்றுமையாக அந்த நந்தவனத்தில் வசித்து வந்தோம். வண்ண பூக்களின் மணமும் எமது அழகும் காண்போரைப் பரவசப்படுத்தும். நாங்கள் குடியிருந்த சில மனிதர்களால் அழிக்கப்பட்டது. இதனால் எமது உறவினர்கள் வெவ்வேறு B நோக்கிப் பிரிந்து சென்றுவிட்டனர். இயற்கையைப் பேணிப் ஒத்துழைப்பதில்லை. இவ்வாறான செயல்களால், எமது விரட்டப்பட்டுள்ளோம். பூக்களைத் தேடி நீண்ட தூரம் பயணிக்கிறோம். உணவிற்காக வாழ்நாள் முழுவதும் அங்குமிங்கும் அலைகிறோம். அதனால் எமது வாழ்க்கை மிகவும் கடினமானதாகிவிட்டது.

45. வெற்றிடம் A இற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

(1) குடும்பம் நீண்ட நாட்களாக வண்ணப் அண்மையில்,

(2) குடும்பமே நீண்ட நாட்களாக வண்ணப் அண்மையில்,

(3) குடும்பம் நீண்ட நாட்களாகவே வண்ணப் அண்மையில்,

46. வெற்றிடம் B இற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

(1) நந்தவனம் திசையை பாதுகாப்பதற்கு மனிதர்கள் இருப்பிடத்தை விட்டு நாம்

(2) நந்தவனம் திசைகளை பாதுகாப்பதற்கு மனிதர்கள் இருப்பிடத்தை விட்டு நாம்

(3) நந்தவனம் திசையை பாதுகாப்பதற்கு மனிதர் இருப்பிடத்தை விட்டு நாங்கள்

www.kegu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை

5

செயலட்டை - 04

சுட்டெண் : ..... 30 நிமிடம்

● கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து **47** ஆம் **48** ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

நான் அதிகாலையில் விழித்தெழுவேன். அவ்வேளை மக்கள் ஆழ்ந்த நித்திரையில் இருப்பர். நான் இனிமையாகப் பாடி அவர்களைத் துயிலெழுப்ப முயற்சி செய்வேன். நான் கூறும் செய்தியை அவர்கள் விளங்கிக் கொள்ளவில்லை போலும் ''சுற்றாடல் விழிப்பு அடைந்துள்ளது. விரைவில் எழும்புங்கள்; பாடம் படியுங்கள்; வேலைகளைத் தொடங்குங்கள்'' என நான் சிறு பிள்ளைகளுக்கும் பெரியவர்களுக்கும் பலவிதமான குரல்களில் சொல்ல முயல்வேன். இரு கால்களும் நோகும் வரை மரக்கிளையில் இருந்து தொண்டை நோகும் வரை நான் விடுக்கும் வேண்டுகோளை மெதுவாகச் செவிமடுத்த ஓரிருவர் நித்திரைக் கலக்கத்துடன் எழும்புவது எனக்குத் தெரிகிறது. எனது கடமை நிறைவேறிய மனமகிழ்ச்சியோடு வேறிடம் நாடிச் செல்கிறேன்.

47. இந்த எண்ணங்கள் தோன்றுவது

(1) பிச்சைக்காரனிடத்தில் (2) பறவையிடத்தில் (3) சிறுபிள்ளையிடத்தில்

48. 'சுற்றாடல் விழிப்படைந்துள்ளது' என்பதன் கருத்து யாது?

(1) சுற்றாடல் எழுச்சி அடைகிறது.

(2) சுற்றாடல் ஒளிமயமாகிறது.

(3) சுற்றாடல் வலிமை பெறுகிறது.

● **49** ஆம் **50** ஆம் வினாக்களில் ஐந்து நிகழ்வுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்நிகழ்வுத் தொடர்கள் குறிப்பிட்ட சந்தர்ப்பம் ஒன்றைக் காட்டுகின்றன. இவை சரியான ஒழுங்கு வரிசையில் காணப்படவில்லை. இந்த நிகழ்வுகளை ஒழுங்குவரிசைப்படுத்தும் போது மூன்றாவது இடத்தில் வரும் நிகழ்வைக் குறிக்கும் விடையின் கீழே கோடிடுக.

49. ஒரு சிறுபிள்ளை கள்ளங்கபடமற்ற மனிதன் ஒருவனுக்கு உதவி செய்கிறன்றது.

A - வீதி ஓரத்தில் முதியவர் ஒருவர் இருப்பதைக் காணுகின்றான்.

B - நேசன் மதிய உணவுக்கான தனது சோற்றுப் பார்சலை அவருக்கு கொடுக்கின்றான்.

C - நேசன் பாடசாலை செல்லப் புறப்படுகின்றான்.

D - முதியவர் உணவு கேட்கின்றார்.

E - முதியவர் அவனுக்கு ஆசிர்வாதம் செய்கின்றார்.

(1) B (2) C (3) D

50. பெற்றறோரின் பாதங்களை வணங்கிய பின்னர் ஒரு சிறுபிள்ளை பாடசாலை செல்லப் புறப்படுகின்றது.

A - ஆடை அணிகள் அணிகின்றான்.

B - அதிகாலையில் எழுகின்றான்.

C - புத்தகங்களை தயார்படுத்துகின்றான்.

D - பெற்றோரின் பாதங்களை வணங்குகின்றான்.

E - முகம் கழுவுகின்றான்.

(1) B (2) C (3) D

www.lkedu.lk

● **51** ஆம் **52** ஆம் வினாக்களில் உள்ள சொல் வரிசைகளில் ஏனைய சொற்களுடன் பொருந்தாத சொல் இடம்பெறும் சொல் வரிசையின் கீழ் கோடிடுக.

51. (1) போஞ்சி, கோவா, கரட், லீக்ஸ்
(2) சிவப்பு, மஞ்சள், நிறம், நீலம்
(3) மேசை, கதிரை, கட்டில், அலுமாரி

52. (1) இசைக்கருவி, புல்லாங்குழல், தபேலா, ஹார்மோனியம்
(2) சுறா, அறுக்குளா, சூரை, நெய்த்தோலி
(3) கிரிக்கெற், காற்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், ஹொக்கி

● **53** ஆம் **54** ஆம் வினாக்கள் பின்வரும் கூடுகளில் உள்ள இலக்கங்களையும் எழுத்துக்களையும் அடிப்படையாயக் கொண்டவை.

2	8	ச	4	5
4	3	1	ல	6
6	4	2	3	ம
2	8	4	5	1
5	6	க	4	3

53. இக் கூடுகளில் உள்ள இலக்கம் 4 களின் எண்ணிக்கை இலக்கம் 5 களின் எண்ணிக்கையை விடக் கூடியதெனில் எழுத்து ல உள்ள கூட்டல் X ஐ வரைக. அவ்வாறு இல்லையெனில் எழுத்து **ச** உள்ள கூட்டில் **X** ஐ வரைக.

54. இக்கூடுகளில் உள்ள இலக்கம் 3 இன் கூட்டுத்தொகை இலக்கம் 2 இன் கூட்டுத்தொகையை விடக் கூடியதெனில் எழுத்து **ம** உள்ள கூட்டில் **X** ஐ வரைக. அவ்வாறு இல்லையெனில் எழுத்து **க** உள்ள கூட்டில் **X** ஐ வரைக.

● பின்வரும் ஒவ்வொரு புதிரிலும் மறைந்துள்ள சொல்லைக் கண்டுபிடித்து அதனைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

55. இது மூன்று எழுத்துக்களைக் கொண்ட சொல்லாகும்.
முதலெழுத்து பலத்தில் உண்டு. குலத்தில் இல்லை.
இரண்டாம் எழுத்து மணத்தில் உண்டு. மனதில் இல்லை.
மூன்றாம் எழுத்து கொம்பில் உண்டு. கொப்பில் இல்லை. : .....

56. இது மூன்று எழுத்துக்களைக் கொண்ட சொல்லாகும்.
முதலெழுத்து அவலில் உண்டு. அயலில் இல்லை.
இரண்டாம் எழுத்து கரத்தில் உண்டு. களத்தில் இல்லை.
மூன்றாம் எழுத்து கும்மியில் உண்டு. குடுமியில் இல்லை. : .....

57. பருமனில் ஒழுங்கு முறைப்படி பிரதேசங்களைக் காட்டும் விடை எது?
(1) நாடு - மாகாணம் - உலகம் - கிராமம்
(2) கிராமம் - உலகம் - மாகாணம் - நாடு
(3) கிராமம் - மாகாணம் - நாடு - உலகம்

www.lkedu.lk



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை

5

செயலட்டை - 05

சுட்டெண் : ..... 30 நிமிடம்

58. பின்வரும் அடைப்புக்களில் உள்ள வாக்கியங்களை வாசியுங்கள். நிகழ்ச்சிகள் நடக்கின்ற வரிசைக் கிரமத்தைக் காட்டுகின்ற விடை எது?

1. இரண்டும் ஒன்றாக உணவைத் தேடிக் கொண்டு வந்து குஞ்சுகளுக்கு ஊட்டின.
2. ஆண்குருவி முயற்சி செய்து ஒரு கூட்டைக் கட்டியது.
3. பெண்குருவி முட்டைகளை அடை காத்தது.
4. பெண்குருவி அங்கு பல முட்டைகளை இட்டது.
5. முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளிவந்தன.
6. குஞ்சுகள் நன்றாக வளர்ந்து வந்தன.

(1) 4, 2, 3, 5, 6, 1 (2) 2, 4, 3, 5, 1, 6 (3) 2, 3, 4, 5, 6, 1

● பின்வரும் ஒவ்வொரு புதிரிலும் மறைந்துள்ள சொல்லைக் கண்டுபிடித்து அதனைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

59. இது மூன்று எழுத்துக்களைக் கொண்ட சொல்லாகும்.
முதலெழுத்து வட்டத்தில் உண்டு. கட்டத்தில் இல்லை.
இரண்டாம் எழுத்து பங்கத்தில் உண்டு. பக்கத்தில் இல்லை.
மூன்றாம் எழுத்து கிளியில் உண்டு. ஒளியில் இல்லை. : .....

60. இது நான்கு எழுத்துக்களைக் கொண்ட சொல்லாகும்.
முதலெழுத்து கரத்தில் உண்டு. மரத்தில் இல்லை.
இரண்டாம் எழுத்து தடியில் உண்டு. தலையில் இல்லை.
மூன்றாம் எழுத்து கதவில் உண்டு. கனவில் இல்லை.
நான்காம் எழுத்து கம்பியில் உண்டு. கப்பியில் இல்லை. : .....

61. இது நான்கு எழுத்துக்களைக் கொண்ட சொல்லாகும்.
முதலெழுத்து சூட்டில் உண்டு. ஏட்டில் இல்லை.
இரண்டாம் எழுத்து பரியில் உண்டு. பறியில் இல்லை.
மூன்றாம் எழுத்து யன்னலில் உண்டு. கன்னலில் இல்லை.
நான்காம் எழுத்து சின்னத்தில் உண்டு. சினத்தில் இல்லை. : .....

62. இது மூன்று எழுத்துக்களைக் கொண்ட சொல்லாகும்.
முதலெழுத்து விரலில் உண்டு. விளக்கில் இல்லை.
இரண்டாம் எழுத்து சிறையில் உண்டு. சிலையில் இல்லை.
மூன்றாம் எழுத்து கறியில் உண்டு. கரியில் இல்லை. : .....

www.keou.lk

● பின்வரும் கவிதையை வாசித்து விடை தருக.

எம்மைப் போன்ற சிறுவர்கள்	எங்கும் என்றும் ஆசையாய் கற்றல்
ஞானம் பண்பு வளரப் பெற்று	மங்காத சுக வாழ்வின் ஆதாரம்
உழைத்திடுவார் நாட்டினுக்கு	எதுவுமில்லை எவர்க்கு

63. ஞானம் பண்பு வளரப் பெற்று என்பதன் பொருள் யாது?

(1) அறிவும் நற்பழக்கவழக்கங்களும் மேம்படுதல்.

(2) இல்லாத குணங்களைக் காட்டுதல்.

(3) அறிவை விட நற்பழக்கவழக்கங்கள் மேம்படுதல்.

64. மங்காத சுகவாழ்வின் ஆதாரமாக அமைவது யாது?

(1) சிறுவர்கள் (2) கற்றல் (3) ஞானமும் பண்பும்

65. ஒரு பிள்ளை காலையில் எழுந்து பாடசாலை செல்வதற்குப் புறப்படும் வரை செய்து முடிக்க வேண்டிய கருமங்கள் பல உள்ளன. அவற்றுள் முதலில் செய்ய வேண்டிய கருமமும் இறுதியில் செய்ய வேண்டிய கருமமும் கீழே தரப்பட்டுள்ளன.

இக் கருமங்களின் சரியான வரிசையைக் கிரமத்தைக் காட்டுவதற்கு இரண்டாம், மூன்றாம், நான்காம் சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான கருமங்களைக் காட்டும் விடை எது?

(A) நித்திரை விட்டெழுதல்

(B) .....

(C) .....

(D) .....

(E) வீட்டிலிருந்து புறப்படுதல்

(1) (B) உடை அணிதல்
(C) முகம் கழுவுதல்
(D) உணவு உண்ணல்

(2) (B) உணவு உண்ணல்
(C) முகம் கழுவுதல்
(D) உடை அணிதல்

(3) (B) முகம் கழுவுதல்
(C) உடை அணிதல்
(D) உணவு உண்ணல்

● பின்வரும் பந்தியை வாசித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

இப்போது கேட்பது இரண்டாவது வெடியின் சத்தமாகும். வெடிச் சத்தம் எந்தத் திசையிலிருந்து வந்ததென எனக்கு அறிந்து கொள்ள முடியவில்லை. நான் தந்தையிடமிருந்து, பிரிந்து ஓடிவந்து இங்கு ஒளிந்துள்ளேன். எனது முன்னங்கால் ஒன்று காயம் பட்டு இரத்தம் பாய்கிறது. தந்தைக்கு என்ன நடந்ததென எனக்குத் தெரியாது. தந்தைக்கு வெடிபட்டதா? தந்தை வெடித்தாக்குதலால் இறந்து விட்டாரா? எனக்கு அறிந்து கொள்ள முடியவில்லை. எனது இதயம் படபடக்கிறது. எனது முழு உடம்பும் நடுங்குகிறது. கண்களில் இருந்து கண்ணீர் பெருகுகின்றது. நாங்கள் எப்பொழுதும் பயத்துடனேயே வாழ்கிறோம். காட்டில் உலாவித் திரியும் முறை பற்றியும் பகைவர்களிடமிருந்து தப்பும் முறை பற்றியும் தந்தை எப்போதும் எனக்குச் சொல்லித் தந்துள்ளார். இருந்தும் இன்று தந்தை பகைவரின் வெடிக்கு இரையாகி விட்டார்.

66. இங்கு கூறப்படுவது

(1) அநாதையான பிள்ளையின் சிந்தனை

(2) ஆபத்துக்குள்ளான பிராணியின் சிந்தனை

(3) வேட்டைக்குச் சென்ற பிள்ளையின் சிந்தனை

www.lkedu.lk

67. இங்கு தரப்பட்டுள்ள விபரங்களின் படி இந்நிகழ்ச்சி நடைபெற்றது

(1) காலையில் எனக் கூறலாம்.

(2) மாலையில் எனக் கூறலாம்.

(3) நாளின் எந்த நேரத்தில் என்று கூறமுடியாது.

68. ஒரு பிள்ளை தனது வீட்டிலிருந்து நண்பனின் வீட்டுக்குப் போகும் பொழுது கடந்து சென்ற இடங்கள் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- அஞ்சல் அலுவலகத்தைக் கடந்தது பொலிஸ் நிலையத்தைக் கடப்பதற்கு முன்னராகும்.
- வைத்தியசாலையைக் கடந்தது பொலிஸ் நிலையத்தைக் கடந்த பின்னராகும்.
- அஞ்சல் அலுவலகத்தைக் கடப்பதற்கு முன்னர் மகாவித்தியாலத்தைக் கடந்தது.

இதற்கேற்பப் பிள்ளையின் வீட்டிலிருந்து மிகக் கூடிய தூரத்திலுள்ள இடத்தையும் மிகக்குறைந்த தூரத்திலுள்ள இடத்தையும் முறையே காட்டும் விடை யாது?

(1) வைத்தியசாலை - மகாவித்தியாலயம்

(2) அஞ்சல் அலுவலகம் - வைத்தியசாலை

(3) பொலிஸ் நிலையம் - மகாவித்தியாலயம்

69. முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப்பொருத்தமான சோடிச் சொற்களைத் தெரிவு செய்க.

இலங்கையில் காட்டுவளம் விரைவாக ..... காரணமாகக் காட்டு யானைகளின் அச்சுறுத்தல் ..... உள்ளது.

(1) குறைதல், அதிகமாக (2) பாதுகாக்கப்படுதல், கட்டுப்படுத்தப்பட்டு

(3) பரவுதல், அதிகரித்து

70. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் சென்ற ஒரு பேருந்து சில நகரங்களைக் கடந்து சென்ற விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.

"அது பூனாவ நகரத்தைக் கடந்து செல்வதற்கு முன்னர் மாரவில நகரத்தைக் கடந்து சென்றது. அது பூனாவ நகரத்தைக் கடந்து சென்ற பின்னர் மாங்குளம் நகரத்தைக் கடந்து சென்றது."

பேருந்து யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு அதே பாதையில் திரும்பி வரும்போது அந்நகரங்களைக் கடக்கும் ஒழுங்குமுறை யாது?

(1) பூனாவ, மாங்குளம், மாரவில

(2) மாரவில, பூனாவ, மாங்குளம்

(3) மாங்குளம், பூனாவ, மாரவில

71. கீழே சில சம்பவங்கள் தரப்பட்டுள்ளன.

X - பாடசாலைக்கு வரத் தாமதமாகியது.

L - வாசுவிற்கு வரமுடியவில்லை.

Z - மக்கள் மரங்களை வெட்டி அகற்றினர்.

O - மழையுடன் கடும் காற்று வீசியது.

H - ஒரு பெரிய மரம் வீதிக்குக் குறுக்கே விழுந்திருந்தது.

மேலே தரப்பட்டுள்ள சம்பவங்களின் சரியான ஒழுங்கு வரிசை யாது?

(1) XOHZL (2) OLHZX (3) OHLZX

www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 06

சுட்டெண் : ..... 30 நிமிடம்

72. பெறுமதியின் ஒழுங்குமுறைப்படி பொருட்களைக் காட்டும் விடை எது?

(1) தங்கம் - வெள்ளி - இரும்பு - செம்பு
(2) வெள்ளி - செம்பு - தங்கம் - இரும்பு
(3) தங்கம் - வெள்ளி - செம்பு - இரும்பு

● **73** ஆம் **74** ஆம் வினாக்களில் இரு சம்பவங்கள் தொடர்பான உரையாடலின் ஒழுங்கு மாறுபட்டுக் காணப்படுகின்றது. இந்த உரையாடல்களை ஒழுங்கு முறைப்படி திருத்தமாகக் குறிப்பிடும் விடையின் கீழே கோடிடுக.

73. ஒரு குழந்தை சுகவீனமுற்றபோது அவனுக்கு மருந்து எடுத்துவந்து கொடுத்த போது நிகழ்ந்த உரையாடல்.

A - மகனை விரைவாக வைத்தியரிடம் அழைத்துச் செல்வோம்.
B - பிள்ளைக்கு நல்ல காய்ச்சல். இம்மருந்தைக் கொடுங்கள் விரைவில் குணம் அடையலாம்.
C - இப்போது உடல் நடுங்குதல் சிறிது குறைவடைந்துள்ளது.
D - கசப்பு ஆனாலும் பரவாயில்லை. மருந்து முழுவதையும் குடி.
E - மகனுக்குக் காய்ச்சல் போலுள்ளது.

(1) ADCEB (2) EABDC (3) BDEAC

74. ஆசிரியை பிள்ளைகளிடம் குமிழ்முனைப் பேனையினால் எழுதவேண்டாம் எனக் கட்டளையிட்ட சந்தர்ப்பத்தில் நிகழ்ந்த உரையாடல்.

A - அப்படியானால் உங்களின் கையில் பேனை இருப்பது ஏன்?
B - எங்களைக் குமிழ்முனைப் பேனையினால் எழுத வேண்டாமென ஆசிரியை கூறினார் அல்லவா?
C - நான் பென்சிலைத் தருகிறேன்.
D - ஆம். எழுத்துக்கள் அழகில்லாது போகும் என்பதால் பென்சிலால் எழுதும்படி ஆசிரியை கூறினார்.
E - நான் இன்று பென்சிலைக் கொண்டுவர மறந்து விட்டேன்.

(1) EDACB (2) BADCE (3) BDAEC

● **75** ஆம் **76** ஆம் வினாக்களுக்குப் பொருத்தமான விடையின் கீழே கோடிடுக.

இது கண்ணைக்கவரும் அழகுமிக்க பிரதேசம். எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேல் என்று மரங்களும் செடிகளும் கொடிகளும் நிறைந்து காணப்படுகின்றன. நான் மேல் மாடியில் உள்ள எனது அறை யன்னலைத் திறந்து பார்த்தபோது கண்ணுக்கெட்டிய தூரம் வரை பரந்த வயல்களும் தென்னந்தோப்புகளும் வேறு மரங்களும் மனதை மயக்கும் காட்சிகளாகக் காணப்பட்டன. நான் இங்கு வந்து சில நாள்களே கடந்துள்ளன. இந்த அழகிய சுற்றாடல் மகிழ்ச்சி அளித்த போதும், இதனை மீறிக்கொண்டு ஓர் இனந்தெரியாத துன்பமும் மனதின் அடித்தளத்தில் இருந்து எழுந்து கொண்டிருக்கிறது. எனது உறவினர்களதும் நண்பர்களினதும் நினைவே இதற்குக் காரணமாகும். கல்விக்காக இவ்வளவு தூரமான இந்த இடத்திற்கு வருகைதந்தது இத்தகைய துன்பத்தை எழுப்பக்கூடும் என நான் ஒருபோதும் நினைக்கவில்லை.

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

75. இங்கு கூறப்படும் மனிதர் வெளிநாட்டவர்

(1) ஆம் (2) இல்லை (3) சொல்ல முடியாது

76. இங்கு கூறப்படுபவர் பல்கலைக்கழக மாணவர்

(1) ஆம் (2) இல்லை (3) சொல்ல முடியாது

● இப்பாடலைப் படித்து **77** முதல் **79** வரை கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

எழுத்தினை அறிந்து **ஏடுகள் படித்து**
விழுமிய அறிவும் **திறன்**களும் மெல்லப்
பழுதிலாது பாடசாலை நிழலில் படித்து
வாழும் **இளமொட்டுக்களே** நாளைய நம் நாட்டின் செல்வங்களே.

இப்பாடலில் தடித்த கறுப்பு நிறத்தினால் காட்டப்பட்டுள்ள சொற்கள் ஒவ்வொன்றினதும் கருத்தைத் தரும் சொல்லைத் தெரிவு செய்து அதற்கு உரிய இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

77. ஏடுகள் படித்தல் (1) கற்றல் (2) எழுதுதல் (3) எண்ணுதல் (.....)

78. திறன் (1) சக்தி (2) ஆற்றல் (3) வலிமை (.....)

79. இளமொட்டுக்கள் (1) அரும்புகள் (2) சிறுபிள்ளைகள் (3) சிறு நண்பர்கள் (.....)

● பின்வரும் பகுதியை வாசித்து **80** முதல் **82** வரை உள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதற்கு உரிய இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

உங்கள் அனைவரதும் சுகம் அறிய ஆவலோடு காத்திருக்கின்றேன். நான் இங்கு வந்து இப்போது ஏறக்குறைய இரண்டு மாதங்களாகி விட்டன. தங்குமிட விடுதியில் உணவு பரவாயில்லை. எனினும் வீட்டைவிட்டுத் தூர இடத்தில் வாழ்வது கவலைதான். மாலை நேரத்தில் ஏனைய பிள்ளைகள் விளையாடப் போனாலும் நான் அதிக நேரம் புத்தகங்களைப் படிப்பதிலேயே செலவிடுகின்றேன்.

80. இக்கடிதத்தை எழுதியவர் இப்போது இருப்பது வெளிநாட்டிலாகும்.

(1) ஆம் (2) இல்லை (3) சொல்ல முடியாது (.....)

81. இக்கடிதம் அவரது வீட்டிலுள்ள ஒருவருக்கே எழுதப்பட்டுள்ளது.

(1) ஆம் (2) இல்லை (3) சொல்ல முடியாது (.....)

82. இக்கடிதத்தை எழுதியவர் கல்விக்காக வீட்டைவிட்டு வேறிடத்தில் வசிப்பவராவார்.

(1) ஆம் (2) இல்லை (3) சொல்ல முடியாது (.....)

83. பெருந்தெருவில் பயணம் செய்யும் ஒரு பேருந்தில் பெரும்பாலும் காணக்கூடியவற்றை உள்ளடக்கிய விடை எது?

(1) சாரதி - பயணிகள் - பிச்சைக்காரர்
(2) நடத்துநர் - சாரதி - இசை
(3) ஆசனங்கள் - சாரதி - நடத்துநர்

www.ikedu.lk

84. சமுத்திரத்தில் எப்போதும் காணக்கூடியவற்றை உள்ளடக்கிய விடை எது?

(1) கப்பல் - அலை - புயல்

(2) மீன் - மீனவர் - கரை

(3) நீர் - அலை - மீன்

● **85 - 87** வரையுள்ள வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள பந்தியிலுள்ள இடைவெளிகளுக்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து, அதன் கீழே கோடிடுக.

எனது வகுப்பு நண்பன் ஒருவன் வாகன விபத்தில் சிக்கி [1] அனுமதிக்கப்பட்டுள்ளான். நான் எனது அம்மாவுடன் ஞாயிற்றுக்கிழமை அவனைப் பார்க்கச் சென்றேன். நாங்கள் அவனுக்கு [2] , சுவையான பலகாரங்களும் கொண்டு சென்றோம். அவனைக் கண்டதும் எனக்குக் கண்ணீர் பெருகியது. அவனது கண்களிலும் கண்ணீர் வந்ததை நான் கண்டேன். அவனது கைகளிலும் தலையிலும் [3] கட்டப்பட்டிருந்தன. அவன் அருகில் நீண்ட நேரம் அமர்ந்து இருந்து மிகுந்த துக்கத்துடன் திரும்பினோம்.

85. முதலாவது கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்

(1) விடுதியில் (2) வைத்தியசாலையில் (3) மருந்தகத்தில்

86. இரண்டாவது கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்

(1) பந்துடன் (2) கிரிக்கற் மட்டையுடன் (3) பழங்களுடன்

87. மூன்றாவது கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்

(1) கட்டுகள் (2) மருந்து (3) நூல்

88. கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசிக்க.

காடு விலங்குகளின் இராஜதானி ஆகும். மனிதர்கள் காட்டு விலங்குகளை △1 விரும்புவர். மனிதர்களுக்கு அவ்வாய்ப்பை வழங்கும் நோக்குடன் காட்டில் இருந்து பிடிக்கப்பட்ட விலங்குகளைக் கூடுகளில் அடைத்து காட்சிப்படுத்தும் முறை ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் உலகில் △2 பற்றிய எண்ணக்கரு உருவாகியது.

பந்தியில் △1 , △2 ஆகிய இடங்களுக்குப் பொருத்தமான சொற்கள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

(1) பார்ப்பதற்கு, பூங்காவனம்

(2) பிடிப்பதற்கு, மிருகக்காட்சிச்சாலை

(3) ரசிப்பதற்கு, மிருகக்காட்சிச்சாலை

89. பின்வரும் கலந்துரையாடலை வாசிக்க.

A - பாடசாலைக்கு எப்படிப் போவது? நனைந்து போவேன்.

B - இன்றும் மழை பெய்யுமா? வானம் இருண்டிருக்கின்றது.

C - குடையை எடுத்துச் செல்ல மறக்க வேண்டாம்.

D - நேற்று பகல் முழுவதும் மழை பெய்தது. இன்றும் மழை பெய்யும் போல் தெரிகின்றது.

இந்தக் கலந்துரையாடல் மிகப் பொருத்தமான ஒழுங்கில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

(1) ADCB (2) BDAC (3) CDBA

www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 07

சுட்டெண் : ..... 30 நிமிடம்

● கீழே தரப்பட்டுள்ள செய்தித்தாள் அறிக்கையை வாசித்து **90, 91** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

கண்டி மாவட்டத்தில் உள்ள மழைக்காடாகிய மொர எல்லக்காடு ஆனது அனுமதியின்றி மரங்களை வெட்டுதல், பயிர்ச்செய்கைகளுக்காக வெட்டித் துப்பரவாக்கல், சிறிய மின்வலு நிலையங்களை அமைத்தல் போன்ற நிலைமைகளால் கடும் சுற்றாடற் பாதிப்புக்கு உட்பட்டுள்ளது. மகாவலி கங்கை உட்படப் பல ஆறுகளினால் வளம் பெறும் இக்காட்டில் ஏறத்தாழ 192 தாவர இனங்கள் இனங்காணப்பட்டுள்ள அதேவேளை அவற்றில் ஏறத்தாழ 92 இனங்கள் இலங்கைக்கே உரிய தாவரங்களாகக் கருதப்படுகின்றன. அவற்றில் 21 தாவர இனங்கள் இப்போது அழியும் அச்சுறுத்தலுக்கு உட்பட்டுள்ளன.
(2015.11.09 ஆந் திகதி ஒரு செய்தித்தாளில் வெளியிடப்பட்ட ஒரு கட்டுரையிலிருந்து)

90. மொர எல்லக்காடு இருப்பது இலங்கையின்

(1) மத்திய மாகாணத்தில் (2) ஊவா மாகாணத்தில் (3) சப்ரகமுவ மாகாணத்தில்

91. பின்வருவனவற்றில் இச்செய்தித்தாள் அறிக்கைக்கு மிகவும் பொருத்தமான தலைப்பு யாது?

(1) மொர எல்லக்காடு பயிர்ச் செய்கைகளுக்காக வெப்பத் துப்பரவாக்கப்படுகிறது.
(2) மொர எல்லக்காடு சுற்றாடற் பாதிப்புக்கு உட்பட்டுள்ளது.
(3) மொர எல்லக் காட்டில் தாவர இனங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

92. மாலை நேரங்களில் வடமத்திய, கிழக்கு மாகாணங்களில் இடையிடையே இடியுடன் கூடிய மழை பெய்யுமென வளிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ளது.
இவ் அறிவித்தலுக்கு அமைய மழை பெய்யக்கூடிய இரு நகரங்கள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

(1) வவுனியா, மட்டக்களப்பு (2) பொலன்னறுவை, கதிர்காமம் (3) அனுராதபுரம், அம்பாறை

93. இலங்கையில் உள்ள நீர்வீழ்ச்சிகளில் தியலும நீர்வீழ்ச்சி துன்கிந்த நீர்வீழ்ச்சியிலும் பார்க்க உயரம் கூடியது. லக்சபான நீர்வீழ்ச்சி தியலும நீர்வீழ்ச்சியிலும் பார்க்க உயரம் கூடியது. இம்மூன்று நீர்வீழ்ச்சிகளில் உயரம் குறைந்த நீர்வீழ்ச்சியும் உயரம் கூடிய நீர்வீழ்ச்சியும் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

(1) தியலும, துன்கிந்த (2) துன்கிந்த, தியலும (3) துன்கிந்த, லக்சபான

94. A - அருமைக் குஞ்சு மூன்றையும்
B - கூடு ஒன்றைக் கட்டியே
C - அதில் வளர்த்து வந்தது
D - குருவி ஒன்று மரத்திலே

மேலேயுள்ள கவிதையின் வரிகள் ஒழுங்கின்றி எழுத்தப்பட்டுள்ளன. அர்த்தமுள்ள கவிதையாக அமையுமாறு ஆங்கில எழுத்துக்களைப் பொருத்தமாக ஒழுங்குபடுத்துக.

(1) DCAB (2) DBAC (3) ACDB

● கவிதையை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

பார்த்ததும் நல்ல ஆசையை உண்டாக்கும்
கண்களைச் சிமிட்டும் தலையை ஆட்டும்
அம்மா சந்தையிலிருந்து கொண்டு வந்த
அழகு மிக்க பொம்மை

95. பொம்மையைக் கொண்டு வந்து தந்தவர் யார்? எங்கேயிருந்து?

(1) அம்மா, சந்தையிலிருந்து (2) அம்மா, கடையிலிருந்து
(3) அப்பா, சந்தையிலிருந்து

96. பொம்மையின் இரு இயல்புகள்

(1) கண்களை சிமிட்டுதல், கைகளை ஆட்டுதல்
(2) தலையை ஆட்டுதல், கண்களைச் சிமிட்டுதல்
(3) ஆடுதல், தலையை ஆட்டுதல்

97. இக்கவிதையில் முக்கியமாக எதனைப்பற்றிக் கூறப்படுகின்றது?

(1) பொம்மையின் பெறுமானம் பற்றி
(2) பொம்மை கிடைத்த விதம் பற்றி
(3) பொம்மையின் அழகு பற்றி

98. செய்தித்தாள், நாவல், கீதம், சிலை, கவிதை, பூ என்பவற்றில் பொருந்தாத சொல்லைத் தெரிவு செய்க.

(1) செய்தித்தாள் (2) கீதம் (3) பூ

99. கடலில் நிதமும் இருப்பவை

(1) அலைகளும் மீன்களும் (2) மீன்களும் நீரும் (3) நீரும் உப்புச் சுவையும்

100. ஒரு சொல்லில் நிதமும் இருப்பவை

(1) எழுத்துக்களும் கருத்தும்
(2) கருத்தும் அச்சுப் பிழைகளும்
(3) இகரக்குறியும், உகரக் குறியும்

● பின்வரும் கவிதையைக் கொண்டு விடை தருக.

மரங் கொடியினைத் தழுவிவரும் தென்றல் காற்று சுகம் தரும்
உரமான எம் உடல் உளத்திற்கு புத்துணர்வையும் தரும் - இந்த
இந்த உண்மையை உணர்ந்து மரங் கொடிதனை எம்முயிர் போல் காக்கும்
கடமையினைச் செய்வதே உன்னத செயலாம்.

101. எமது உடலிற்கும் உள்ளத்திற்கும் புத்துணர்வைத் தருவது

(1) மரங்கொடி (2) தென்றல் காற்று (3) உன்னத செயலைச் செய்தல்

102. இக்கவிதை பிரதானமாக எமக்குக் கூறுவது

(1) உடல் உளத்திற்கு புத்துணர்வு தரும் தென்றல் காற்று பற்றி
(2) மரங் கொடியைத் தென்றல் காற்று தழுவி வருவது பற்றி
(3) சூழலில் மரங் கொடியைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் பற்றி

www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 08

சுட்டெண் : ..... 30 நிமிடம்

● தரப்பட்டுள்ள கவிதையைக் கொண்டு விடை எழுதுக.

சிறகடிக்கும் பறவைகளின் கீத ஒலி கேட்கும்.
வீசும் தென்றல் காற்று உடலுக்கு குளிர்ச்சி தரும்.
மலரும் மலர்களோ எங்கும் மணம் பரப்பும்.
அதிகாலைப் பொழுதோ இன்பம் ஊட்டும்.

103. கவிதையில் குறிப்பிடப்படுவது, காலையில் வீசும் காற்று
(1) பறவைகளின் கீத ஒலியை கேட்கச் செய்யும் என்பதை
(2) உடலுக்கு குளிர்ச்சி தரும் என்பதை
(3) மலர்கள் மணம் பரப்பும் என்பதை

104. காலையில் நடைபெறும் ஆனால் கவிதையில் குறிப்பிடாத ஒரு விடயம்
(1) குளிர்ச்சியான தென்றல் காற்று வீசுதல்
(2) நறுமணமுள்ள மலர்கள் மலருதல்
(3) ஒளி மெதுவாகப் பரவுதல்

● தரப்பட்டுள்ள கவிதையைக் கொண்டு விடை எழுதுக.

சோலை எங்கும் அதிகாலையில் - வெண்ணிறப் பூக்கள் பூத்துக் குலுங்கி
இளங்காற்றில் அசையும் காட்சியோ - அழகு
வெண்ணிறமாக மின்னி மின்னி - எழுத்தறியச் செல்லும் பாப்பாக்கள்
அசைந்தாடும் மலர்களை விட - அழகானவர்களல்லவா!

105. இக்கவிதை கூறுவது
(1) சோலை எங்கணும் மலர்ந்திருக்கும் மலர்கள் பற்றி
(2) சிறு பிள்ளைகளின் அழகு பற்றி
(3) காற்றில் பூக்கள் அசையும் விதம் பற்றி

106. இக்கவிதையில் 'எழுத்தறியச் செல்லும்' என்பதன் கருத்து யாது?
(1) கற்கச் செல்லும் (2) நூலகத்திற்குச் செல்லும் (3) நிரையாகச் செல்லும்

107. இக்கலந்துரையாடலை வாசித்து, அதன் படிமுறைகள் சரியான ஒழுங்கில் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.
A - ஆ! மிகவும் அழகான சட்டை
B - ஆம். எனக்கு மிகவும் விருப்பம்.
C - உண்மையா! இது புதியது ஒன்று அல்ல.
D - நீர் இதனை விரும்புகிறீரா?
E - ஆனாலும் இது மிகவும் அழகானது.
(1) ACEDB (2) ADBCE (3) ABDEC

www.ikedu.lk





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

● ஆங்கில எழுத்துக்களுக்கு எதிரே இடப்பட்டுள்ள சொற்களுக்கேற்பச் சரியான வாக்கியம் அமையும் ஆங்கில எழுத்து வரிசையைத் தெரிவு செய்க.

108. A - பையை எடுத்துக் கொண்டு B - ஆடையை அணிந்து C - தந்தை
D - புறப்பட்டார் E - சைக்கிளில்
(1) ABCED (2) CBAED (3) CBDAE

109. A - அக்கா B - தம்பிக்கு C - தங்கைக்கு
D - பாவாடையும் E - காற்சட்டையும் F - வாங்கினார்
(1) ABDCEF (2) ABEDCF (3) ABECDF

● பின்வரும் இரு ஆங்கிலச் சொற்களிலும் A, D, E, F, H என்னும் ஐந்து ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலாக 1, 2, 3, 4, 5 என்னும் இலக்கங்கள் (இதே ஒழுங்கின்றி) இடப்பட்டு, அவ்விலக்கங்கள் ஏறுவரிசையில் எழுதப்பட்டுள்ளன.

HEAD = 1235 FEED = 1134

110. எழுத்து E இற்குப் பதிலாக இடப்பட்டுள்ள இலக்கம் யாது?
(1) 1 (2) 3 (3) 5

111. எழுத்து D இற்குப் பதிலாக இடப்பட்டுள்ள இலக்கம் யாது?
(1) 1 (2) 3 (3) 5

● பின்வரும் விபரத்தைப் பயன்படுத்தி விடை எழுதுக.

எனது பெயர் சேகர். நான் வகுப்பு முடிவடைந்து வீட்டுக்கு வந்து கொண்டிருந்தேன். வீதியின் பக்கத்தில் ஒரு பேருந்து தரிப்பிடத்தில் சிறிய தாயாரும் சிறிய தந்தையாரும் நின்று கொண்டிருந்தனர். அவர்களுடைய மகள் சுசீலா வகுப்பு முடிவடைந்து வரும் வரைக்கும் அங்கே காத்திருந்தனர். அவர்கள் என்னைக் காணவில்லை. அந்நேரத்தில் ஒரு பேருந்து தரிப்பிடத்துக்கு அண்மையில் நிறுத்தப்பட்டது. அலுவலக வேலை முடிவடைந்து வருபவர்கள் அப்பேருந்தில் நிறைந்து இருந்தனர். தங்கை சுசீலா அப்பேருந்திலிருந்து இறங்கி வந்தார்.

112. பின்வரும் கூற்றுக்களிடையே சரியான கூற்றைத் தெரிவு செய்க.
(1) சேகர் தரம் ஐந்தில் கற்கும் மாணவன் எனக் கூறலாம்.
(2) சுசீலா தரம் நான்கில் கற்கும் மாணவி எனக் கூறலாம்.
(3) அவர்கள் இருவரும் கற்கும் தரங்கள் பற்றிக் கூறுவது கடினம்.

113. பின்வரும் கூற்றுக்களிடையே பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
(1) சேகரின் தந்தை சுசீலாவின் தந்தையின் தமையனாக இருக்கலாம்.
(2) சுசீலாவின் தாயார் சேகரின் தாயாரின் தங்கையாக இருக்கலாம்.
(3) சுசீலாவின் தாயார் சேகரின் தந்தையின் தங்கையாக இருக்கலாம்.

● **114, 115** ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் குறிப்பிடப்படும் விடயத்தை எழுதுக.

114. நான் வானத்தில் பறப்பேன். மிகவும் மேலே உள்ள வானத்தில் முகில்களுக்கிடையேயும் நான் சில வேளைகளில் பறக்கின்றேன். சிறகுகளை அசைக்காமல் என்னால் பறக்கத்தக்கதாக இருத்தல் புதுமையான விடயமாகும். நான் பறக்கும் போது சத்தம் உண்டாகின்றமையால் கீழே உள்ளவர்கள் நான் வானத்தில் பறப்பதை அறிந்து கொள்வர். விசேடமாகச் சிறிய பிள்ளைகள் என்னைப் பார்த்து மகிழ்ச்சியடைவதை நான் அறிவேன். நான் மரங்களில் தங்கியிருப்பதில்லை. நான் விசேட இடங்களில் மாத்திரம் இறங்குவேன்.

: .....

www.kedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை செயலட்டை - 09

5

சுட்டெண் : ..... 30 நிமிடம்

115. நான் பல்வேறு நிறங்களைக் கொண்டுள்ளேன். சில வேளைகளில் சிவப்பாக இருப்பேன்; கபில நிறமாக இருப்பேன்; நீல நிறமாக இருப்பேன்; வெண்ணிறமாக இருப்பேன்; சில வேளைகளில் எனக்கு நிறமே இல்லை. சில விசேட சந்தர்ப்பங்களில் மனிதர்கள் என்னைக் குடிப்பர். என்னைக் குடிப்பதன் மூலம் மனிதர்களுக்கு நன்மையின்றித் தீமை ஏற்படுவதில்லை. எனினும் பெரும் பாலானவர்கள் விருப்பமின்றி என்னை குடிப்பதை நான் அறிவேன். விசேடமாகச் சிறுபிள்ளைகள் என்னைக் குடிக்க விரும்புவதில்லை.

: .....

● பின்வரும் இரு கவிதைகளையும் கொண்டு **116, 117** ஆகிய வினாக்களுக்கு விடை எழுதுக.

சித்திரை வந்தால் வசந்தம் பிறக்கும்
வண்ண வண்ணப் பூக்கள் எங்கும்
கொத்துக் ..... மலர்ந்து பொலியும்
இக்காட்சிதனைக் காணக் களிப்புடன் வாரீர்

பூக்களில் வண்டுகள் தேன் குடிப்பதைப் பாரீர்
மகிழ்வுடன் பாடல் இசைப்பதைக் கேளீர்
சிறகடித்து எழுந்து அங்கும் இங்கும்
செல்வதை பாரீர் அதோ செல்வதைப் பாரீர்

116. (i) வண்ண வண்ணப் பூக்கள் என்பதன் கருத்து யாது? : .....

(ii) வண்டுகள் எவற்றின் மீதிருந்து பாடல் இசைக்கின்றன? : .....

117. (i) முதல் கவிதையில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான ஒரு சொல்லை எழுதுக?

: .....

(ii) சந்தோசமாக என்னும் கருத்தைத் தரும் இரு சொற்களும் யாவை?

: ..... : .....

● பின்வரும் இரு கவிதைகளையும் கொண்டு **118, 119** ஆகிய வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.

குளத்தில் தாமரை மலர்கள் மலர்ந்தனவே
பூவின் நறுமணம் திசையெங்கும் பரவியதே
வீசிய காற்று குளிரைத் தரவே
என் உள்ளம் அசைந்ததே

உள்ளம் எங்கும் உவகை தோன்றவே
கையில் பூவை ஏந்திச் சென்று
மகனே உன் பெற்றோரை நீ வணங்குவாயானால்
ஒருபோதும் உனக்கு வராதே தீங்கு

118. 'வீசிய காற்று குளிரைத் தரவே' என்பதன் கருத்து யாது?

(1) வீசிய குளிர்ச்சியான காற்று
(2) குளத்தில் நிறைந்த நீர்
(3) பூக்களின் மனம் உள்ள காற்று

119. 'உனக்கு வராதே தீங்கு' என்பதன் கருத்து யாது?

(1) பெற்றோர்கள் உனக்குத் தீங்கு செய்யமாட்டார்கள்.

(2) உனக்கு ஒருபோதும் தீங்கு ஏற்படமாட்டாது.

(3) உனது வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும்.

120. ஒரு நிகழ்வின் மூன்று சந்தர்ப்பங்கள் சரியான ஒழுங்குமுறையில் எழுதப்பட்டுள்ள விதத்தைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) விளங்கிக் கொள்ளல் → பாடத்தை வாசித்தல் → விளக்குதல்

(2) கதவை மூடுதல் → பூட்டுதல் → நித்திரை செய்தல்

(3) காற்று வீசுதல் → குளிர்ச்சியை உணருதல் → வெப்பம் குறைதல்

● பின்வரும் கவிதையை வாசித்து **121, 122** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

சுத்த முள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு. நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே

121. இக்கவிதை தரும் முக்கியமான செய்தி யாது?

(1) சுத்தம் பேணுதல் வேண்டும்

(2) எங்கும் சுத்தம் உண்டு

(3) ஆயுளைப் பேணுதல் வேண்டும்

122. கவிதையில் உள்ள கருத்துக்கள் சரியான முறையில் காட்டப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

(1) சுத்தம் பேணுதல் வேண்டும் ⟶ சுத்தம் பேணுவதால் ஆயுளும் அதிகரிக்கும் ⟶ சுத்தம் இருந்தால் சுகம் இருக்கும்

(2) சுத்தம் பேணுவதால் ஆயுளும் அதிகரிக்கும் ⟶ சுத்தம் இருந்தால் சுகம் இருக்கும் ⟶ சுத்தத்தைப் பேணுதல் வேண்டும்

(3) சுத்தம் இருந்தால் சுகம் இருக்கும் ⟶ சுத்தத்தைப் பேணுதல் வேண்டும் ⟶ சுத்தம் பேணுவதால் ஆயுளும் அதிகரிக்கும்

123. இருளிலே இல்லாது ஒளியில் மட்டுமே
என் கூடச் சேர்ந்து வரும் எனது நண்பன்
இதில் குறிப்பிடப்படுவது

(1) சிநேகிதன் பற்றி (2) நிழல் பற்றி (3) சூரியன் பற்றி

124. கதை ஒன்றின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது. அதிலுள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்கள் இடம்பெறும் பகுதியைத் தெரிவு செய்க.

சிட்டுக் குருவியும் தேனீயும் காட்டில் உள்ள இரு நெருங்கிய நண்பர்களாவர். ஒரு நாள் ஆற்றின் அருகே உள்ள ..... கிளையில் இருந்த சிட்டுக் குருவி நண்பன் நீரில் அடித்துச் செல்லப்படுவதைக் கண்டது. ..... விரைவாகச் சொண்டினால் மரத்தின் ஓர் இலையைப் பிடுங்கியது. அதனைத் ..... அருகில் போட்டது. நீரில் போடப்பட்ட இலை மீது தேனீ ஏறிக் கொண்டது. சிறிது நேரத்தில் சிறகடித்துக் கொண்டு பறந்து சென்றது.

(1) ஒரு மரத்தின், தேனீக்கு, சிட்டுக் குருவி

(2) கரையில், சிட்டுக் குருவி, தேனீக்கு

(3) ஒரு மரத்தின், சிட்டுக் குருவி, தேனீக்கு

www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 10

சுட்டெண் : ..... 30 நிமிடம்

● பின்வரும் அட்டவணையைப் பார்க்க.

	முதலாம் நிரல் ↓	இரண்டாம் நிரல் ↓	மூன்றாம் நிரல் ↓
முதலாம் நிரை →	A	B	C
இரண்டாம் நிரை →	F	E	D
மூன்றாம் நிரை →	G	H	I

கீழேயுள்ள படிமுறை 1 இலும் படிமுறை 2 இலும் குறிப்பிட்டுள்ளவாறு அட்டவணை மாற்றப்பட்டுள்ளது. அதனைப் பயன்படுத்தி **125, 126** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

படிமுறை 1 - முதலாம் நிரை இருக்கும் இடத்திற்கு இரண்டாம் நிரையையும் இரண்டாம் நிரை இருந்த இடத்திற்கு முதலாம் நிரையையும் மாற்றல்

படிமுறை 2 - இரண்டாம் நிரல் இருக்கும் இடத்திற்கு மூன்றாம் நிரலையும் இரண்டாம் நிரை இருந்த இடத்திற்கு இரண்டாம் நிரலையும் மாற்றல்

125. மாற்றங்களைச் செய்ததன் பின்னர் அட்டவணையின் நடு அடைப்பில் இருக்கும் எழுத்து யாது?

(1) B (2) C (3) D

126. ஆரம்பத்தில் இருந்த அட்டவணையில் எழுத்து I இருந்த இடத்திற்கு மாற்றங்களைச் செய்த பின்னர் வரும் எழுத்து யாது?

(1) H (2) G (3) D

● **127** ஆம் **128** ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள எழுத்து நிரைகள் ஒவ்வொன்றிலும் ஒரு நல்ல இயல்பைக் காட்டும் ஒரு கூற்று மறைந்துள்ளது. அக்கூற்றுக்களின் எழுத்துக்களிடையே சேர்க்கப்பட்டுள்ள பொருத்தமற்ற எழுத்துக்களை நீக்கும் போது கிடைக்கும் கருத்துள்ள கூற்றைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

127. நாம் க பொ ப ய் ப் பே ங் ச த் மா ச் ட் டோ க ம்

: .....

128. நாம் மு ங் தி ல ப யோ ச ர் க ஞ் ளை ம ந் தி ப் க போ சி ம்

: .....

129. எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போல் என்பதன் கருத்தை விளக்கும் கூற்று யாது?

(1) தேவையான போது உதவுதல்.

(2) பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தலையிடுதல்.

(3) பிரச்சினையைக் கூட்டுவதற்கு செயற்படுதல்.

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 11

சுட்டெண் : ..... 30 நிமிடம்

● பின்வரும் நெய்யரியில் உள்ள தகவல்களை வாசிக்க.

A	3	3	2	B	6	C	D
4	1	A	F	E	4	E	F
D	F	3	4	D	7	A	E
C	4	5	D	1	B	4	1
3	F	D	E	F	1	C	A

130. இங்கு A எழுத்துகள் 4 இருக்கும் எனின், நெய்யரியில் இருக்கும் இலக்கம் 6 ஐச்சுற்றி ஒரு வட்டத்தை வரைக. அவ்வாறு இல்லாவிட்டால், நெய்யரியில் இருக்கும் இலக்கம் 2 இன் கீழ் ஒரு கோட்டினை வரைக.

131. இங்கு D, F ஆகிய எழுத்துகள் ஒவ்வொன்றும் 5 தடவை இருப்பின், நெய்யரியில் இருக்கும் இலக்கம் 7 இன் கீழ் ஒரு கோட்டினை வரைக. 4 தடவை இருப்பின், நெய்யரியில் தொடக்கத்தில் உள்ள எழுத்து A ஐச் சுற்றி ஒரு வட்டத்தை வரைக.

132. 1, 3, 4 என்னும் இலக்கங்கள் ஒவ்வொன்றும் 4 தடவை இருப்பின், இலக்கம் 5 ஐச் சுற்றி ஒரு வட்டத்தை வரைக. அவ்வாறு இல்லாவிட்டால், 5 இன் மீது X ஐக் குறிக்க.

133. தனது பணிகளில் மாத்திரம் ஈடுபடும் முரளி ஏனையோருடன் பழகுவதற்கு அல்லது உலகில் நடைபெறுபவற்றைக் கண்டு அறிவு பெறுவதற்கு முயலுவதில்லை. இதற்குப் பொருத்தமான பழமொழி யாது?

(1) எது எப்படிப் போனாலும் தன் காரியம் தனக்கு
(2) கிணற்றுத் தவளை போல
(3) தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்

134. வாகன உரிமையாளர்கள் அனைவரும் செல்வந்தர்கள் அல்லர் எனின்,

(1) செல்வந்தர் ஒருபோதும் வாகன உரிமையாளர்கள் அல்லர்.
(2) வாகன உரிமையாளர்களாக இல்லாத எல்லோரும் செல்வந்தர்கள் ஆவர்.
(3) சில வாகன உரிமையாளர்கள் செல்வந்தர்கள் அல்லர்.

135. சில்லுகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் ஒழுங்கில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

(1) கொள்கலன் வண்டி, மோட்டார் வாகனம், முச்சக்கர வண்டி, ஒற்றைச் சில்லு வண்டி
(2) ஒற்றைச் சில்லு வண்டி, முச்சக்கர வண்டி, கொள்கலன் வண்டி, மோட்டார் வாகனம்
(3) ஒற்றைச் சில்லு வண்டி, முச்சக்கர வண்டி, மோட்டார் வாகனம், கொள்கலன் வண்டி

136. பின்வரும் வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

(1) கெக்கு இரையை விழுங்குகின்றது.
(2) கொக்கு இரையை விழுங்குகின்றது.
(3) கொக்கு இரயை விழுங்குகின்றன.

137. "புளங்காங்கிதம்" என்னும் சொல்லில் உள்ள எழுத்துகள் மூலம் ஆக்கக்கூடிய ஒரு சொல்,

(1) பூங்கா (2) தங்கம் (3) காம்பு

www.ikeduk

138. எல்லாத் தோடம்பழங்களும் எலுமிச்சம் பழங்களாகும். வேறு எதுவும் எலுமிச்சம்பழம் அன்று. அவ்வாறெனின்,

(1) எல்லா எலுமிச்சம் பழங்களும் தோடம்பழங்கள் ஆகும்.

(2) சில எலுமிச்சம் பழங்கள் தோடம்பழங்கள் ஆகும்.

(3) தோடம்பழங்கள் எலுமிச்சம் பழங்கள் அல்ல.

139. தரப்பட்டுள்ள கவிதையின் நான்கு வரிகளின் சரியான ஒழுங்குமுறை யாது?

W - அங்கே சென்று கற்பதால் M - அறிவு மேலும் வளருமே

N - எங்கள் பள்ளிக் கூடமே H - எளிமை மிக்க நிலையமே

(1) WNMH (2) NHWM (3) NWMH

● உவமானத்திற்குப் பொருத்தமான சந்தர்ப்பத்தைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

140. எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றினாற் போல்

(1) சிக்கலைத் தீர்க்க உதவுதல்

(2) மேலும் கோபமூட்டச் செய்தல்

(3) வறியவர்களுக்குப் பண உதவி செய்தல்

141. ஆகாயத்தில் கோட்டை கட்டுவது போல்

(1) செய்ய முடியாத செயலைச் செய்ய முயலுதல்

(2) மிக ஊக்கத்துடனும் தைரியத்துடனும் செயற்படுதல்

(3) பெரிய வேலையைச் செய்யத் தொடங்குதல்

142. ஒரு கவிதையின் நான்கு வரிகள் மாற்றி எழுதப்பட்டுள்ள விதம் கீழே காணப்படுகின்றது. அவற்றின் சரியான ஒழுங்கு முறை யாது?

A - வீட்டில் என்னிடம் இருக்கிறது

B - நித்தம் நித்தம் அதன் முன்னால்

C - மெத்தப் பெரிய கண்ணாடி

D - நின்றே அழகு பார்த்திடுவேன்

(1) C, B, A, D (2) C, A, B, D (3) D, C, A, B

● சரியான விடையைத் தெரிவு செய்க.

143. 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்ற பழமொழியின் கருத்து,

(1) ஒற்றுமையே பலம்.

(2) விடாமுயற்சி பலம் தரும்.

(3) பலசாலியும் தோல்வி அடையலாம்.

144. 'மனநிறைவே ஒருவனுக்குச் சிறந்த செல்வமாகும்.' என்ற கருத்தைத் தரும் பழமொழி,

(1) பொறுத்தார் பூமியாள்வார்.

(2) போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து.

(3) பேராசை பெருந் தரித்திரம்.

● தரப்பட்டுள்ள வாக்கியங்களிடையே மிகச் சரியான கருத்துள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

145. (1) அங்குமிங்கும் இருந்த ஒரு மரத்தின் கிளை மீது காகம் பார்த்தது.

(2) ஒரு மரத்தின் கிளை மீது இருந்த காகம் அங்குமிங்கும் பார்த்தது.

(3) அங்குமிங்கும் இருந்த காகம் ஒரு மரத்தின் கிளை மீது பார்த்தது.

www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 12

சுட்டெண் : ..... 30 நிமிடம்

146. (1) பெற்றோரிடமும் எப்போதும் ஆசிரியர்களிடமும் மிகப் பணிவாகப் பிள்ளைகள் நடந்து கொள்ள வேண்டும்.

(2) எப்போதும் பிள்ளைகள் மிகப்பணிவாக நடந்து பெற்றோரிடமும் ஆசிரியர்களிடமும் கொள்ள வேண்டும்.

(3) பெற்றோரிடமும் ஆசிரியர்களிடமும் பிள்ளைகள் எப்போதும் மிகப் பணிவாக நடந்து கொள்ள வேண்டும்.

● பின்வரும் வாக்கியங்கள் கருத்துள்ளனவாக இருப்பதற்குச் செய்ய வேண்டிய மாற்றத்தைத் தெரிவு செய்க.

147. வண்ணத்துப்பூச்சி ரோசா மலரில் நீரைக்குடிக்கின்றது.

(1) வண்ணத்துப்பூச்சி என்பதற்குப் பதிலாகக் ''குளவி'' என்பதை இடுதல்

(2) ரோசா என்பதற்குப் பதிலாகத் ''தாமரை'' என்பதை இடுதல்

(3) நீரை என்பதற்குப் பதிலாகத் ''தேனை'' என்பதை இடுதல்

148. பிள்ளை வீதியில் பாடம் படிக்கிறது.

(1) பிள்ளை என்பதற்குப் பதிலாக ''மகன்'' என்பதை இடுதல்

(2) வீதியில் என்பதற்குப் பதிலாக ''அறையில்'' என்பதை இடுதல்

(3) பாடம் படிக்கின்றது என்பதற்குப் பதிலாக ''ஆரம்பிக்கின்றது'' என்பதை இடுதல்

149. பின்வருவனவற்றில் ஒருவருடைய மனத்திற்கு உவமானமாக அமையாதது எது?

(1) வெண்ணெய்க் கட்டிபோல் மென்மையானது.

(2) சிக்குப்பட்ட நூற்பந்து போன்றது.

(3) மண் கட்டி போல் கடினமானது.

150. ஒருவர் அச்சமடைந்த சந்தர்ப்பத்தைக் காட்டுவதற்கு உகந்த உவமானம் பின்வருவனவற்றுள் யாது?

(1) மான் குட்டி போன்று நடுங்குகின்றார்.

(2) புறாப் போன்று ஒலியெழுப்புகின்றார்.

(3) சிங்கம் போல் கர்ச்சிக்கின்றார்.

151. ''மேலே பாய்ந்தால் நிலத்தில் விழக்கூடும்'' என்பதை விளக்கும் கூற்றைத் தெரிவு செய்க.

(1) மேலே பாயாவிட்டால் நிலத்தில் விழ வேண்டியிருக்கும்.

(2) மேலே செல்கின்ற எதுவும் நிலத்தில் பட வேண்டும்.

(3) மேலே பாய்வதாயின் நிலத்தில் விழ வேண்டும்.

152. சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானைப் பார்க்கும் போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக்கூட்டத்தைக் காணலாம் என மோகன் கூறுகின்றான். இது நடைபெற இயலாது. இதற்குக் காரணம்,

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை

(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லாமை

(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை

www.ikeau.lk

153. கண்ணனின் ஒரே பிள்ளையாகிய ரவி பாடசாலைக்குத் தாமதமாக வந்து, தம்பியுடன் கடைக்குச் சென்று திரும்புவதற்குத் தாமதம் ஏற்பட்டதெனக் கூறினான். இது உண்மையாக இருக்கலாம். இதற்குக்காரணம்,

(1) ரவி உலாவித் திரிய விரும்புகின்றமை

(2) ரவிக்குச் சில சகோதரர்களும் சகோதரிகளும் இருக்கின்றமை

(3) ரவியின் சிறிய தகப்பனாரின் ஒரு மகனும் ரவியின் வீட்டில் இருக்கின்றமை

● **154** ஆம் **155** ஆம் வினாக்களிலே தொடக்கத்தில் தரப்பட்டுள்ள கூற்றைப் பற்றிய சரியான முடிவைத் தெரிவு செய்க.

154. பாடசாலைச் சேவைப் பேருந்து நேரந்தவறாமல் பாடசாலைக்கு வருகின்றது.

(1) இது பெரும்பாலும் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும்.

(2) இது ஒருபோதும் நடைபெறுவதில்லை.

(3) இது எப்போதும் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும்.

155. முயன்றால் வெற்றியீட்டலாம்.

(1) இது எப்போதும் உண்மையாகும்.

(2) இது பெரும்பாலும் உண்மையாகும்.

(3) இது ஒருபோதும் உண்மையானதன்று.

● **156** ஆம் **157** ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள இரு வாக்கியங்களினதும் கருத்திற்கேற்பச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

156. முரளியின் வீடு சங்கரின் வீட்டுக்குக் கிழக்கே உள்ளது. சங்கரின் வீடு மோகனின் வீட்டுக்குக் கிழக்கே உள்ளது. ஆகவே,

(1) முரளியின் வீடு மோகனின் வீட்டுக்குக் கிழக்கே உள்ளது.

(2) மோகனின் வீடு முரளியின் வீட்டுக்கு அண்மையில் உள்ளது.

(3) மோகனின் வீடு சங்கரின் வீட்டிலும் பார்க்க முரளியின் வீட்டுக்கு அண்மையில் உள்ளது.

157. காற்று வீசினால் வெப்பம் குறையும். காற்று வீசவில்லை. எனவே,

(1) வெப்பம் அதிகரிக்கின்றது.

(2) வெப்பம் குறைகின்றது.

(3) வெப்பம் மாறாதிருக்கின்றது.

158. திருத்தமான கருத்தைத் தரும் சோடி வாக்கியங்களைத் தெரிவு செய்க.

(1) நாம் பாதுகாக்கப்பட வேண்டிய சுற்றாடல் ஆகும். அப்போது நாம் சுற்றாடலைப் பாதுகாப்போம்.

(2) எங்களைச் சுற்றாடல் பாதுகாக்க வேண்டும். அப்போது நாம் சுற்றாடலைப் பாதுகாப்போம்.

(3) நாம் சுற்றாடலைப் பாதுகாக்க வேண்டும். அப்போது சுற்றாடல் எங்களைப் பாதுகாக்கும்.

159. புலமைப்பரிசில் பரீட்சையில் திறமையாகச் சித்தியடைவேன் என்று சாந்தன் கூறுகின்றான். அவன் இவ்வாறு கூறுவது,

(1) இப்பரீட்சையில் எவரும் இலகுவாகச் சித்தியடையலாம் என்பதனாலாகும்.

(2) அவன் பரீட்சைக்கு நன்கு தயாராகி இருந்ததனாலாகும்.

(3) இவ்வருடம் ஆகஸ்ட் மாதத்தில் பரீட்சை நடைபெறுவதினாலாகும்.

160. பிள்ளைகள் மூத்தோருக்கு மரியாதை செய்யப்பழகுதல் வேண்டும். இதற்குரிய காரணம்,

(1) மூத்தோரினால் பிள்ளைகளுக்குத் தண்டனை வழங்க முடியுமாகையால்

(2) மூத்தோர் நோயினால் வருந்துவதனால்

(3) மூத்தோர் பிள்ளைகளை விட அனுபவம் நிறைந்தவராகையால்

www.ikedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 13

சுட்டெண் : ..... 30 நிமிடம்

● **161** ஆம் **162** ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்களில் மிகச்சரியான கருத்துள்ள வாக்கியத்தின் கீழே கோடிடுக.

161. (1) கீழ்ப்படிவுள்ள பெரியோர் கூறும் அறிவுரைகளை நல்ல பிள்ளைகள் பின்பற்றுவர்.
(2) கீழ்படிவுள்ள பிள்ளைகள் பெரியோர் கூறும் நல்ல அறிவுரைகளைப் பின்பற்றுவர்.
(3) நல்ல பிள்ளைகள் பெரியோர் கூறும் கீழ்ப்படிவான அறிவுரைகளைப் பின்பற்றுவர்.

162. (1) பசியோடு காட்டின் உள்ளே சென்ற நரி கள்ளங்கபடமற்ற முயலைத் துரத்திச் சென்றது.
(2) கள்ளங்கபடமற்ற நரியைப் பசியோடு காட்டின் உள்ளே சென்றமுயல் துரத்திச் சென்றது.
(3) பசியோடு காட்டின் உள்ளே சென்ற கள்ளங்கபடமற்ற முயல் நரியைத்துரத்திச் சென்றது.

● **163** ஆம் **164** ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழே கோடிடுக.

163. அருண் பாடசாலைக்கு அருகில் வசித்து வந்தான். எனினும் அவன் பல நாட்களாகப் பாடசாலைக்குச் சமுகமளிக்கவில்லை. அவன் பாடசாலைக்குச் சமுகமளிக்காததற்குக் காரணமாக இருக்குக் கூடியது எது?
(1) அது பாடசாலை விடுமுறைக் காலமாக இருந்தமை.
(2) அருண் சுகவீனமுற்றிருந்தமை.
(3) பாடசாலை பஸ் வராதிருந்தமை.

164. தீபன் முயற்சியோடு பாடங்களைப் படிக்கும் பிள்ளையான போதிலும் கடந்த புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையவில்லை. அவன் பரீட்சையில் சித்தியடையாமைக்குக் காரணமாக இருக்கக் கூடியது எது?
(1) தீபன் மீது ஏனைய மாணவர்கள் பொறாமை கொண்டிருந்தமை.
(2) பரீட்சையின் போது தீபனால் சரியான விடைகளை எழுத முடியாமல் இருந்தமை.
(3) தீபன் நினைத்ததை விட வினாத்தாள் இலகுவாக இருந்தமை.

165. அமீன் படிப்பதில் எவ்வித ஆர்வமும் காட்டுவதில்லை. அவன் எந்நேரமும் விளையாட்டில் ஈடுபடுவான். தாயும் தந்தையும் பாடங்களைப் படிக்கும்படி எப்போதும் அறிவுரை கூறுவர். அமீன் சிறிதளவும் அவற்றைக் கேட்பதில்லை. அமீனின் பெற்றோர்களுடைய செயலை விவரிக்கும் மிகச்சிறந்த தொடர் பின்வருவனவற்றுள் எது?
(1) அது குருடனுக்கு குருடன் வழிகாட்டியது போன்ற செயலாகும்.
(2) அது செவிடன் காதில் ஊதிய சங்கு போன்ற செயலாகும்.
(3) அது குளிக்கப் போய் சேறு பூசியது போன்ற செயலாகும்.

166. "முயற்கொம்பு தேடி அலைந்தது போல" என்பதற்குப் பொருத்தமான சந்தர்ப்பம் பின்வருவனவற்றுள் எது?
(1) இல்லாத பொருளைத் தேடி அலைதல்
(2) அலைந்து திரிந்து தேடிய பொருளைப் பெறுதல்
(3) வழிதவறி நிற்பவனிடம் வழி கேட்டல்



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 14

சுட்டெண் : ..... 30 நிமிடம்

167. ஒரு காட்டில் ஒரு புலி வசித்து வந்தது. புலி வயோதிபப்பருவம் அடைந்ததனால் தனது இரையைத் தேடுவது அதற்குச் சிரமமாகி விட்டது. ஒரு நாள் பசு ஒன்றின் தோலைப் போர்த்திக் கொண்டு புலி பசுக்கூட்டத்தினுள் நுழைந்தது. தன்னையும் பசு எனக்கூறிக் கொண்டது. பின்னர் பசுக்களை ஒவ்வொன்றாகப் பிடித்துத்தின்ன ஆரம்பித்தது. இதனாலேயே ''பசுத்தோல் போர்த்த புலி'' என்ற தொடர் வழங்கப்படுகிறது. இத்தொடரின் பொருள் யாது?

(1) அலகில் தீயவர்கள் எல்லோரும் நல்லவர் போல நடிப்பார்கள்.

(2) நல்லவர் போல நடிக்கும் தீயவர்களும் உலகில் உள்ளனர்.

(3) உலகில் நல்லவர்கள் எல்லோரும் தீயவர்கள் போல நடிப்பார்கள்.

168. பசியினால் வாடிய நரி ஒன்று இரை தேடிச் செல்லும் போது திராட்சைக் குலை ஒன்றைக் கண்டு அதனைப் பறித்துத் தின்றது.

மேலுள்ள வாக்கியத்தின் கருத்துப் பிழையானது. வாக்கியத்தின் கருத்துப் பிழையாவதற்குக் காரணமான விடயம் யாது?

(1) நரிக்குப் பசி ஏற்படுவதில்லை.

(2) நரி இரைதேடிச் செல்வதில்லை.

(3) நரி திராட்சையை உணவாகக் கொள்வதில்லை.

169. ''ஒரு நரி கோபமடைந்து ஆமை ஒன்றை நீரில் தள்ளி விட்டபோது ஆமை நீரில் அமிழ்ந்து இறந்து போனது.''

இவ்வாக்கியத்தின் கருத்துப் பிழையானது. வாக்கியத்தின் கருத்துப் பிழையாவதற்குக் காரணமான விடயம் எது?

(1) ஆமைக்கு நரியைச் சந்திக்க வாய்ப்புக் கிடைப்பதில்லை.

(2) நரியைக் கண்டவுடன் ஆமை பயப்படுவதற்குக் காரணம் எதுவுமில்லை.

(3) ஆமை நீரில் அமிழ்ந்து இறப்பதற்கு இடமில்லை.

170. எங்கள் தோட்டத்தில் உள்ள மரங்களில் அதிக எண்ணிக்கையில் உள்ளவை பழமரங்கள் ஆகும். எல்லாப் பழமரங்களிலும் காய்கள் காணப்பட்டன. காய்கள் உள்ள மரங்களில் சில பழமரங்கள் அல்லாதனவாகும். இவ்விபரங்களின் படி கீழே காணப்படும் எக்கூற்றுச் சரியானதாகும்?

(1) தோட்டத்திலுள்ள எல்லா மரங்களிலும் காய்கள் உண்டு.

(2) பழமரங்கள் அல்லாத மரங்கள் சிலவற்றில் காய்கள் உண்டு.

(3) காய்கள் உள்ள எல்லா மரங்களும் பழமரங்கள் ஆகும்.

● **171** ஆம் **172** ஆம் வினாக்களுக்குரிய திருத்தமான விடையின் கீழே கோடிடுக.

171. அனுமதி கிடைத்ததும் கைப்பிடியிலிருந்து விடுபட்ட சிட்டுக்குருவியைப் போல நான் வாசற்பக்கம் ஓடினேன். பின்வருவனவற்றுள் எது கைப்பிடியிலிருந்து விடுபட்ட சிட்டுக்குருவியைப் போல என்பதன் கருத்தைத் தருகிறது?

(1) மிகக் கஷ்டத்துடன் வாசற்பக்கம் சென்றேன்.

(2) மிக வேகமாக வாசற்பக்கம் சென்றேன்.

(3) மிக மெதுவாக வாசற்பக்கம் சென்றேன்.

172. ''கிராமங்களில் வசிப்பவர்கள் விருந்து உபசாரம் செய்வதில் விருப்பம் உடையவர்கள்'' இக்கூற்றுக்கு ஏற்ப,

(1) விருந்து உபசாரம் செய்வதில் கிராமத்தில் இருப்பவர்கள் மட்டுமே விருப்பம் உடையவர்கள்.

(2) நகரங்களில் வசிப்பவர்கள் விருந்து உபசாரம் செய்வதில் விருப்பம் இல்லாதவர்கள்.

(3) கிராமங்களில் வசிப்பவர்கள் விருந்து உபசாரம் செய்வதில் விருப்பமில்லாதவர்கள் அல்லர்.

173. பின்வரும் வினாக்கூற்று கருத்தற்றது. இக்கூற்று ஏன் கருத்தற்றதாக இருக்கின்றது என்பதைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

எழுத வாசிக்கத் தெரியாத ஒரு பெண்ணுக்குக் கடிதம் ஒன்று கிடைத்தது. அப்பெண் வேறு ஒருவரிடம் அக்கடிதத்தை உரத்து வாசிக்கும்படி கேட்டுக்கொண்டதோடு கடிதத்தில் உள்ள விடயங்களை அதனை வாசிப்பவர் கேட்காதபடி கடிதத்தை வாசித்து முடிக்கும் வரை தனது கைகளால் அவரது காதுகளைப் பொத்திக் கொண்டு இருந்தாள்.

: .....

● **174** ஆம் **175** ஆம் வினாக்களில் காணப்படும் சொற்களை நன்கு விவரிக்கின்ற கூற்றினைத் தெரிவு செய்க.

174. வங்கி என்பது,

(1) பணக் கொடுக்கல் வாங்கல் செய்யும் இடம்.

(2) பணத்தைச் சேமிக்கும் இடம்.

(3) பணத்தைக் கடனாக வழங்கும் இடம்.

175. தொழிற்சாலை என்பது,

(1) பொருள்கள் பரிவர்த்தனை செய்யப்படும் இடம்.

(2) பொருள்கள் உற்பத்தி செய்யப்படும் இடம்.

(3) பொருள்களை விற்பனை செய்யும் இடம்.

176. குறிஞ்சி மாகாணத்தில் பூங்குடிக் கிராமத்தின் வீடுகளில் போக்குவரத்துக்காக சைக்கிள் அல்லது மோட்டார் சைக்கிள் காணப்பட்டது. இவை இரண்டும் உள்ள ஒரு வீடும் இல்லை. குறிஞ்சி மாகாணத்தில் மோட்டார் சைக்கிள் உள்ள வீடுகள் பூங்குடிக் கிராமத்தில் மாத்திரமே உண்டு. இவ்விவரங்களின் படி உறுதியாகக் கூறக்கூடியது யாது?

(1) குறிஞ்சி மாகாணத்தில் மோட்டார் சைக்கிள் உள்ள வீடுகள் சைக்கிள் உள்ள வீடுகளை விட அதிகம்.

(2) சைக்கிள், மோட்டார் சைக்கிள் இரண்டும் உள்ள வீடுகள் எதுவும் பூங்குடிக் கிராமத்தில் இல்லை.

(3) குறிஞ்சி மாகாணத்தில் பணக்காரர்களின் வீடுகளில் சைக்கிள், மோட்டார் சைக்கிள் இரண்டும் இருந்தன.

● **177** முதல் **179** வரை உள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் முதலில் தரப்பட்டுள்ள கூற்று பிழையானது ஆகும். இக்கூற்று ஏன் பிழையானது என்பதைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

177. மாலை நேரத்தில் மலர்ந்த பூக்களால் நிரம்பியிருந்த குளம் மிக அழகாகக் காட்சியளித்தது.

(1) குளங்களில் தாமரைப் பூக்களைக் காண முடியாது.

(2) மாலை நேரத்தில் தாமரைப் பூக்கள் மலரமாட்டா.

(3) தாமரைப் பூக்களினால் குளம் அழகு பெறமாட்டாது.

(.....)

www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை

5

செயலட்டை - 15

சுட்டெண் : ..... 30 நிமிடம்

178. ஆமையின் உரோமங்களினால் செய்யப்படும் அலங்காரப் பொருட்களின் விலை அதிகமாகும்.

(1) ஆமை உரோமத்தினால் அலங்காரப் பொருட்கள் செய்ய முடியாது.

(2) ஆமைக்கு உரோமம் இல்லை.

(3) அலங்காரப் பொருட்களின் விலை அதிகம் இல்லை.

(.....)

179. மேற்குத் திசையில் சூரியன் உதிக்கும் போது வானம் அழகுடன் பிரகாசிக்கும்.

(1) சூரியன் உதிக்கும் போது வானம் அழகுடன் பிரகாசிக்காது.

(2) ஆகாயம் ஒருபோதும் பிரகாசிக்கமாட்டாது.

(3) சூரியன் மேற்குத் திசையில் உதிக்கமாட்டாது.

(.....)

● **180** ஆம் **181** ஆம் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

180. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு ஆயத்தமாகும் மாணவன் ஒருவன் தனது தாய்க்கு இவ்வாறு கூறினான். "இவ்வருடம் பரீட்சையில் சித்தியடையாவிடின், மிகக் கவனமாகப் பாடங்களைப் படித்து எவ்வாறேனும் அடுத்த வருடம் சித்தியடைவேன்." மாணவனின் இக்கூற்று ஏன் தவறானது?

(1) முதலாவது தடவை பரீட்சைக்குத் தயாராகும் அளவு நன்றாக இரண்டாவது பரீட்சைக்கு ஆயத்தமாக முடியாது என்பதால்.

(2) அடுத்த வருடப் பரீட்சை இவ்வருடப் பரீட்சையை விட மிகக் கடினமாக அமையும் என்பதால்

(3) தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு ஒரு தடவை மட்டுமே தோற்ற முடியும் என்பதால்.

(.....)

181. தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு ஆயத்தமாகும் மாணவன் ஒருவன் தனது ஆசிரியருக்குப் பின்வருமாறு கூறினான். "புலமைப்பரிசில் பரீட்சையில் கணித வினாத்தாளுக்கு 100 புள்ளிகள் பெற்று நான் பரீட்சையில் முதன்மைச் சித்தி பெறுவேன்." இக்கூற்று ஏன் தவறானது?

(1) புலமைப்பரிசில் பரீட்சையில் கணித வினாத்தாள் மிகக் கடினமான ஒன்று என்பதால்.

(2) கணிதத்தில் திறமை இருப்பினும் பரீட்சை வினாத்தாளுக்கு விடை அளித்தல் கடினம் என்பதால்.

(3) தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் கணித வினாத்தாள் இல்லை என்பதால்.

(.....)

● **182** முதல் **185** வரையுள்ள வினாக்களில் உள்ள கூற்றுக்களை வாசியுங்கள். ஒவ்வொரு கூற்றும் எப்போதும் உண்மையாக இருக்குமெனில் (✓) அடையாளத்தையும் சில வேளைகளில் மட்டும் உண்மையாக இருக்குமெனில் (✗) அடையாளத்தையும் புள்ளிக் கோட்டின் மீது அடையாளம் இடுக.

182. ஆண்பிள்ளைகள் பெண்பிள்ளைகளை விட அதிக உடற்பலம் உள்ளவர்கள் (.....)

www.ikedu.lk

183. மீன்கள் நீரில் வாழும். (.....)

184. ஒரு முக்கோணிக்கு மூன்று பக்கங்கள் உண்டு. (.....)

185. மேசைகள், கதிரைகள், அலுமாரிகள் ஆகியன மரத்தினால் செய்யப்படும். (.....)

● **186** ஆம் **187** ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழே கோடிடுக.

186. பாடசாலை வேலைகளைப் பொறுப்புடனும் கவனத்துடனும் செய்கின்ற சந்திரன் பிறர் துன்பமையும் போது தன்னால் இயன்றவரை உதவிகளையும் செய்வான். நண்பனுக்குப் பென்சில் இல்லாத போது தன்னிடமுள்ள மேலதிகப் பென்சிலைக் கொடுப்பான். எவருக்கேனும் புத்தகம், அழிப்பான், அடிமட்டம் இல்லை எனில் தன்னுடையவற்றை அவர்கள் பயன்படுத்தக் கொடுப்பான். இங்கு கூறப்பட்ட விளக்கத்தின் படி,

(1) சந்திரன் இரக்கம் மிக்க மாணவன். (2) சந்திரன் வீரம் மிக்க மாணவன்.

(3) சந்திரன் பொறுப்பு மிக்க மாணவன்.

187. எங்கள் அதிபர் எல்லோரும் விரும்பும் குணம் உடையவர். அவர் எப்போதும் சிரித்த முகத்துடன் காணப்படுவார். ஒருநாள் பாடசாலைக்கு வந்த ஒருவன் ஏதோ காரணம் பற்றி அதிபரைக் கடுஞ்சொற்களால் ஏசினான். எனினும் எங்கள் அதிபர் எதுவும் பேசாது அவன் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார். இந்த நிகழ்ச்சி எடுத்துக் காட்டுவது,

(1) அதிபரின் பலவீனம் (2) அதிபரிடம் காணப்படும் பிறர் விரும்பும் தன்மை

(3) அதிபரின் பொறுமைக் குணம்

188. பின்வரும் நிகழ்வுடன் தொடர்புடைய பழமொழியைத் தெரிவு செய்க.

பணம் இல்லாது கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு நண்பன் ஒருவன் தன்னிடமிருந்த பணத்தில் ஒரு பகுதியைக் கொடுத்தான்.

(1) ஆசை வெட்கம் அறியாது (2) உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்

(3) அன்பான நண்பனை ஆபத்தில் அறி

189. கீதா பணக்கார வீட்டுப் பிள்ளை. அவள் சிறுவர் சஞ்சிகைகள், சித்திரக் கதைகள் எனப் பலவற்றைப் பாடசாலைக்குக் கொண்டு வருவாள். அவற்றை ஏனைய மாணவர்களுக்குக் காட்டுவாள். ஆனாலும், யாருக்கும் வாசிக்கக் கொடுக்க மாட்டாள். அவளைப் பற்றிக் குறிப்பிடுவதற்குப் பொருத்தமானது?

(1) பொதுநலவாதி (2) சுயநலவாதி (3) உலோபி

190. சாருமதியின் அண்ணன் பொது அறிவு வினாக்களுக்கு விடையளிப்பதில் மிகவும் கெட்டிக்காரன். அவனை எவராலும் தோற்கடிக்க முடியாது. ஒரு நாள் சாருமதியின் வீட்டிற்கு வந்த நண்பியின் தங்கை கேட்ட கேள்விக்கு சாருமதியின் அண்ணனால் விடை கூற முடியவில்லை. இந் நிகழ்வுக்குப் பொருத்தமான பழமொழி எது?

(1) நிறைகுடம் தளம்பாது (2) ஆனைக்கும் அடி சறுக்கும்

(3) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

191. அமலனின் ஊருக்கு ஒரு பேருந்து மட்டுமே சேவையில் ஈடுபடுகிறது. காலையில் பாடசாலை மாணவர்களையும் வேளைக்குச் செல்பவர்களையும் ஏற்றி வரும் பேருந்து மாலை ஐந்து மணிக்கு மீண்டும் அவனது ஊருக்குத் திரும்பிச் செல்லும். தினமும் தவறாது பாடசாலைக்குப் பேருந்தில் வரும் அமலன் இன்று பாடசாலைக்கு வரவில்லை. அவன் பாடசாலைக்குச் சமூகமளிக்காமைக்குக் காரணமாக இருக்கக் கூடியது எது?

(1) பேருந்து தரிப்பிடத்தில் நிற்காமல் சென்றமை (2) பேருந்து சேவையில் ஈடுபடாமை

(3) பேருந்தை அவன் தவறவிட்டமை

www.ikedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 16

சுட்டெண் : ..... 30 நிமிடம்

192. இன்று காலைக் கூட்டத்தின் போது வகுப்பு மாணவன் ஒருவன் மயக்கமடைந்து நிலத்தில் விழுந்து விட்டான். பின்வரும் எக்காரணத்தினால் அவ்வாறு மயக்கம் ஏற்பட்டது?

(1) நேற்று மாலை வரை விளையாடியமை

(2) கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் அவனுக்கு விருப்பமில்லாது இருந்தமை

(3) அவன் காலை உணவை உண்ணாமல் பாடசாலைக்கு வந்தமை

193. காலைக்கு மாலை என்பது போல பிறப்புக்கு .....

(1) வாழ்க்கை (2) இறப்பு (3) முயற்சி (4) படிப்பு

194. தாகத்திற்கு தண்ணீர் போல நோய்க்கு .....

(1) மருந்து (2) விருந்து (3) தண்ணீர் (4) சோறு

195. எழுத்தானிக்கு ஏடு போல வெண்கட்டிக்கு .....

(1) வெண்பலகை (2) கற்பலகை (3) கரும்பலகை (4) சுண்ணம்

196. சித்திரைக்கு வைகாசி போல வியாழனுக்கு .....

(1) நாள் (2) சனி (3) கிழமை (4) வெள்ளி

197. துக்கத்திற்கு கறுப்பு என்பது போல சமாதானத்திற்கு .....

(1) நீலம் (2) வெள்ளை (3) சிவப்பு (4) பச்சை

198. 31 நாட்களைக் கொண்ட ஒரு மாதத்தில் செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை ஆகிய நாட்கள் ஐந்து வீதம் உள்ளன. இம்மாதத்தின் 24ஆம் திகதி என்ன நாளாகும்?

(1) புதன்கிழமை (2) வியாழக்கிழமை (3) வெள்ளிக்கிழமை

199. 2000.05.01 ஆந் திகதி இலங்கையில் பிறந்த ஒருவர் 2016.06.01 ஆந் திகதி வரை சூரியனைச் சுற்றிப் பயணம் செய்துள்ள முழுச் சுற்றுக்களின் எண்ணிக்கை யாது?

(1) 10 (2) 16 (3) 17

200. ஓர் அரசாங்கப் பாடசாலையில் முதலாந் தவணைப் பரீட்சை மார்ச் 18 ஆம் திகதி வியாழக்கிழமை தொடங்கியது. மார்ச் 23 ஆந் திகதி பொது விடுமுறைத் தினமாகும். தவணைப் பரீட்சை 6 நாட்கள் நடைபெற்றது. தவணைப் பரீட்சை முடிவடைந்த நாள் எது?

(1) திங்கட்கிழமை (2) வியாழக்கிழமை (3) வெள்ளிக்கிழமை

201. ஒரு பிள்ளை அதன் வயது 10, 16 ஆக இருக்கும் போது பிரபலமான இரு பரீட்சைகளுக்குத் தோற்ற வேண்டும். கீதா, நிலானியிலும் பார்க்க ஐந்து வயதினால் மூத்தவள். கீதா முதலாவது பரீட்சைக்கு 2017 ஆம் ஆண்டில் தோற்றுவாராயின் நிலானி இரண்டாவது பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய ஆண்டு எது?

(1) 2022 (2) 2028 (3) 2032

www.ikedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 17

சுட்டெண் : ..... 30 நிமிடம்

202. ஆண்டில் சில மாதங்களுக்கு 31 நாட்களும் வேறு சில மாதங்களுக்கு 30 நாட்களும் உள்ளன. அவ்வாறெனின், 28 நாட்கள் உள்ள மாதங்களின் எண்ணிக்கை யாது?

(1) 1 (2) 2 (3) 12

203. ஒரு குறித்த ஆண்டின் ஒக்டோபர் 17 ஆந் தேதி வியாழக்கிழமையாகும். அவ்வாண்டின் நவம்பர் 17 ஆம் நாள்,

(1) வெள்ளிக்கிழமை (2) சனிக்கிழமை (3) ஞாயிற்றுக்கிழமை

204. பாடசாலைப் பிள்ளைகளின் சித்திர, கைப்பணிக் கண்காட்சி ஒரு வெள்ளிக்கிழமை ஆரம்பித்தது. அது 8 நாட்களாக நடைபெற்றதெனின், முடிவடைந்த நாள் யாது?

(1) சனிக்கிழமை (2) வெள்ளிக்கிழமை (3) வியாழக்கிழமை

205. வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை, ...

(1) வெள்ளிக்கிழமை, வியாழக்கிழமை

(2) திங்கட்கிழமை, புதன்கிழமை

(3) ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை

206. 2013 ஆம் ஆண்டில் நடுவில் வரும் தினம் யாது?

(1) யூன் - 30 (2) யூலை - 01 (3) யூலை - 02

207. ஒக்டோபர் 01 உலக சிறுவர் தினமாகும். 2013 ஆம் ஆண்டில் ஜனவரி 01 தொடக்கம் ஒக்டோபர் 01 வரையுள்ள நாட்களின் எண்ணிக்கை யாது?

(1) 273 (2) 274 (3) 275

● அட்டவணையில் உள்ள தகவல்களுக்கேற்ப விடை எழுதுக.

நாள்	ஜனவரி 31	பெப்ரவரி 28	மார்ச் 31	ஏப்ரல் 30	மே 31
எண்ணிக்கை	31	59	.....	120	151

208. மார்ச் 31 ஆந் திகதிக்குப் பொருத்தமான எண் யாது?

(1) 89 (2) 87 (3) 90

209. எண் 100 இற்குப் பொருத்தமான திகதி யாது?

(1) ஏப்ரல் - 01 (2) ஏப்ரல் - 10 (3) ஏப்ரல் - 20

www.lkedu.lk

210. ஒரு நகரத்தை இரு கட்டங்களில் அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது. முதல் கட்டத்திற்கு 10 மாதங்களும் இரண்டாம் கட்டத்திற்கு 15 மாதங்களும் எடுக்கின்றன. நகரத்தின் அபிவிருத்திப் பணி 2010 ஆம் ஆண்டு யனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது எனின் எந்த ஆண்டில் நகரம் அபிவிருத்தி செய்து முடிக்கப்படும்?

(1) 2014 (2) 2013 (3) 2012

● 2009 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆந் திகதி வியாழக்கிழமை ஆகும். இதற்கேற்ப **211, 212** ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

211. 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உள்ள புதன்கிழமைகளின் எண்ணிக்கையும் வியாழக் கிழமைகளின் எண்ணிக்கையும் முறையே,

(1) 4, 4 (2) 4, 5 (3) 5, 4

212. 2009 ஆம் ஆண்டில் 365 நாட்கள் உள்ளன. அவ்வாண்டில் எத்தனை வியாழக்கிழமைகள் உள்ளன?

(1) 50 (2) 52 (3) 53

● 2008 ஆண்டு 21 ஆம் நூற்றாண்டின் முதல் தசாப்தத்திற்கு உரியதாகும். இதற்கேற்ப **213** ஆம் வினாவிற்குரிய விடையைத் தெரிவு செய்க.

213. உமது பிறந்த ஆண்டு,

(1) 20 ஆம் நூற்றாண்டின் பத்தாம் தசாப்தத்திற்கு உரியதாகும்.

(2) 21 ஆம் நூற்றாண்டின் முதலாம் தசாப்தத்திற்கு உரியதாகும்.

(3) 21 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்திற்கு உரியதாகும்.

214. 20 ஆம் நூற்றாண்டின் 6 ஆம் தசாப்தத்திற்குரிய ஆண்டு,

(1) 1955 (2) 1965 (3) 2055

215. 2007 ஆம் ஆண்டில் 365 நாட்களும் 2008 ஆம் ஆண்டில் 366 நாட்களும் உள்ளன. 2007 ஆம் ஆண்டில் ஜனவரி 1 ஆந் தேதி திங்கட்கிழமையாகும். 2008 ஆண்டில் ஜனவரி 1 ஆந் தேதி செவ்வாய்க் கிழமையாகும். இதற்கேற்ப 2009 ஜனவரி 1 ஆந் தேதி,

(1) திங்கட்கிழமை (2) புதன்கிழமை (3) வியாழக்கிழமை

216. ஐந்து ஞாயிற்றுக் கிழமைகள் உள்ளே ஓர் ஏப்ரல் மாதத்தில் அந்த ஞாயிற்றுக்கிழமைகளின் தேதிகளின் கூட்டு:த்தொகை இருக்கத்தக்க உயர்ந்தபட்ச பெறுமானம்

(1) 75 (2) 80 (3) 85

217. ஓர் அனர்த்தம் காரணமாக மே 14 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் சனிக்கிழமையும் ஞாயிற்றுக் கிழமையும் உட்படத் தொடர்ச்சியாக 9 நாட்களுக்கு ஒரு பாடசாலை மூடப்பட்டது. அப்பாடசாலை மறுபடியும் திறக்கப்பட்ட தினம்?

(1) மே 22 செவ்வாய்க்கிழமை (2) மே 23 செவ்வாய்க்கிழமை

(3) மே 23 புதன்கிழமை

218. ஒரு சங்கத்தில் பத்து உறுப்பினர்கள் உள்ளனர். ஒவ்வொரு மாதமும் ஒரு தடவை உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியலின் ஒழுங்குமுறைக்கு ஏற்ப ஒவ்வோர் உறுப்பினரினதும் வீட்டில் சங்கத்தின் கூட்டம் நடைபெறுகின்றது. முதலாம் உறுப்பினரின் வீட்டில் கூட்டம் பெப்ரவரி மாதத்தில் நடைபெற்றது. அவருடைய வீட்டில் அடுத்ததாகக் கூட்டம் எம்மாதத்தில் நடைபெறும்?

(1) ஒக்டோபர் (2) நவெம்பர் (3) டிசெம்பர்

www.ikedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை

5

செயலட்டை - 18

சுட்டெண் : ..... 30 நிமிடம்

219. பெப்ரவரி மாதத்தில் 29 நாட்களை உடைய நெட்டாண்டாகும். ஒவ்வொரு 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நெட்டாண்டு வரும். 1996 ஆம் ஆண்டு நெட்டாண்டானால் 29 நாட்கள் கொண்ட பெப்ரவரி மாதங்கள் பின்வரும் எந்த ஆண்டுகளில் வரும்?

(1) 2006 உம் 2010 உம் (2) 2008 உம் 2012 உம் (3) 2010 உம் 2015 உம்

220. ஒரு சங்கத்தில் 10 பேர் உறுப்பினராக உள்ளனர். அவர்கள் மாதத்திற்கு ஒரு தடவை ஒழுங்குமுறையில் ஒவ்வொரு உறுப்பினரின் வீட்டில் கூடுவர். திரு. குணசேகரன் வீட்டில் சென்ற மார்ச் மாதம் கூட்டம் நடைபெற்றது. திரு. குணசேகரின் வீட்டில் அடுத்த கூட்டம் எந்த மாதத்தில் நடைபெறும்?

(1) ஜனவரி (2) பெப்ரவரி (3) நவம்பர்

221. முந்தநாள் புதன்கிழமை. மோகனின் பிறந்த தினம் நாளையின்றைக்கு வருகின்றது. மோகனின் பிறந்த தினம் வரும் நாள் எது?

(1) சனிக்கிழமை (2) ஞாயிற்றுக்கிழமை (3) திங்கட்கிழமை

222. பின்வரும் அட்டவணையில் உள்ளவர்களில் வயது குறைந்தவரையும் வயது கூடியவரையும் முறையே தெரிவு செய்க.

பெயர்	பிறந்த திகதி
மாதவி	2006.06.13
ரேவதி	2007.10.02
பாத்திமா	2006.04.28
சமந்தி	2007.05.20

(1) பாத்திமா, ரேவதி

(2) சமந்தி, மாதவி

(3) ரேவதி, பாத்திமா

223. இலங்கைக்குச் சுதந்திரம் எந்த நூற்றாண்டில் எத்தசாப்தத்தில் கிடைத்தது.

(1) 19 ஆம் நூற்றாண்டின் 5 ஆம் தசாப்தத்தில்

(2) 20 ஆம் நூற்றாண்டின் 4 ஆம் தசாப்தத்தில்

(3) 20 ஆம் நூற்றாண்டின் 5 ஆம் தசாப்தத்தில்

224. சங்கரின் தங்கை ரேவதி ஆவாள். அவளுக்கு மூன்று சகோதரர்களும், இரு சகோதரிகளும் உள்ளனர். சங்கருக்கு இருக்கும் சகோதரர்களின் எண்ணிக்கையும், சகோதரிகளின் எண்ணிக்கை யாவை?

(1) சகோதரர்கள் 2, சகோதரிகள் 2

(2) சகோதரர்கள் 2, சகோதரிகள் 3

(3) சகோதரர்கள் 3, சகோதரிகள் 3

225. நான் ஓர் ஆண் ஆவேன். குணசீலனின் மகன் எனது சிற்றப்பா எனின், குணசீலனுக்கும் எனக்கும் உள்ள உறவுமுறை யாது?

(1) குணசீலன் எனது பாட்டன் (2) குணசீலன் எனது மாமா

(3) குணசீலன் எனது தந்தை

www.lkedu.lk





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

226. கீதாவின் தற்போதைய வயது 11 ஆகும். அவளுடைய தாயாரின் தற்போதைய வயது கீதாவின் வயதின் மூன்று மடங்கிலும் பார்க்க மூன்றினால் கூடியதாகும். இன்னும் நான்கு ஆண்டுகளில் தாயாருடைய வயது யாது?

(1) 36 (2) 37 (3) 40

227. சங்கரின் தந்தையின் தந்தைக்கும் சங்கரின் தம்பிக்குமிடையே உள்ள உறவு முறை யாது?

(1) சிறிய தகப்பனும் மகனும்

(2) மாமாவும் மருமகனும்

(3) பாட்டனும் பேரனும்

228. செய்தித்தாள், நாவல், கீதம், சிலை, கவிதை, பூ என்பவற்றில் பொருந்தாத சொல் யாது?

(1) செய்தித்தாள் (2) கீதம் (3) பூ

229. தற்போது கண்ணனின் வயது 12 ஆகும். அவனுடைய வயது சகோதரனின் வயதின் நான்கு மடங்காகும். கண்ணனின் வயது இன்னும் எத்தனை ஆண்டுகளில் சகோதரனின் வயதின் இரு மடங்காக இருக்கும்?

(1) 6 (2) 10 (3) 24

230. விஜயன் மோகனின் தந்தையாவார். மயூரன் விஜயனின் தம்பி ஆவார். கீதா மோகனின் ஒரே தங்கை ஆவார். கீதாவும் மயூரனும் சந்திக்கும் போது கீதா என்ன உறவு முறையைக் கூறிக்கொண்டு மயூரனுடன் பேசுவார்.

(1) சித்தப்பா (2) பெரியப்பா (3) மாமா

231. ஒரு வகுப்பிலுள்ள நான்கு பிள்ளைகளின் பிறந்த தினங்கள் கீழே காணப்படுகின்றன.

சந்திரன் - 2001.01.24 விதுசன்- 2000.12.31

கீதா - 2001.08.30 ரேவதி - 2000.08.18

இதற்கேற்பச் சரியான கூற்று யாது?

(1) ரேவதி கீதாவிலும் மூத்தவள்


(2) விதுசன் சந்திரனிலும் இளையவன்

(3) கீதா சந்திரனிலும் மூத்தவள்

232. பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு ஐம்பது ஆண்டு நிறைவு விழா 2005 ஆம் ஆண்டில் நடைபெற்றது. அவ்விழாவில் பங்குபற்றிய போது பிரியாவின் வயது 10 ஆகும். அப்பாடசாலையின் நூற்றாண்டு விழா நடைபெறும் போது பிரியாவிற்கு எத்தனை வயதாகும்?

(1) 40 (2) 50 (3) 60

● சேரனும் மனைவியும் அவளின் தாய் தந்தை, பாட்டன் பாட்டி, மாமன் மாமி, தங்கை தம்பி, மகன் மகள் ஆகியோருக்கிடையே உள்ள உறவுமுறைகளைக் காட்டுவதற்குப் பின்வரும் கோட்டுப்படம் வரையப்பட்டுள்ளது. இதை அடிப்படையாகக் கொண்டு **233** ஆம் **234** ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.



www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 19

சுட்டெண் : ..... 30 நிமிடம்

233. மேலே தரப்பட்டுள்ள கோட்டுப்படத்தில் சேரனின் மாமன் மாமியைக் காட்ட வரையப்பட்டுள்ள அடைப்புக்கள் எவை?

(1) | A | B | (2) | C | D | (3) | E | F |


234. எழுத்து G இனால் சேரனின் தங்கை காட்டப்பட்டிருப்பின் G இற்கும் J இற்கும் இடையிலான உறவு முறை யாதாக இருக்கும்?

(1) தாய் - மகள் (2) சிறியதாய் - மகள் (3) மாமி - மருமகள்

235. ரமணியின் வயது ரூபிணியின் வயதின் அரைவாசியாகும். ரூபிணியின் வயது தர்சனியின் வயதின் அரைவாசியாகும். மூவரினது வயதினதும் மொத்தம் 35 ஆண்டுகள் எனில், தர்சனிக்கு எத்தனை வயது?

(1) 15 (2) 18 (3) 20

236. கமலினியின் தாய் பிரியா, தகப்பன் திலகர், பாலன் கமலினியின் சகோதரன், கமலினியின் மகன் குகன். பிருந்தனும் சியாமாவும் பாலனின் இரு பிள்ளைகள். இக்கூற்றுக்களின்படி பின்வரும் வரிப்படத்தில் ① ஆம், ② ஆம் இடங்களில் உள்ள கூடுகளுக்குப் பொருத்தமான பெயர்கள் எவை?



(1) பிருந்தன், சியாமா (2) குகன், பிருந்தன் (3) கமலி, பிருந்தன்

237. குமார் தனது 10 வது பிறந்தநாளை இன்றைக்கு இரு ஆண்டுகளுக்கு முன்னர் கொண்டாடினான். அன்று லலிதாவின் வயது 4 ஆண்டுகளாக இருந்தது. இதற்கேற்பக்குமாரினதும் லலிதாவினதும் வயதுகள் தொடர்பான சரியான கூற்று யாது?

(1) இன்று குமாரின் வயது லலிதாவின் வயதின் இரு மடங்காகும்.
(2) இன்று குமார் லலிதாவிலும் இரு ஆண்டுகளினால் மூத்தவன்.
(3) இன்னும் 5 ஆண்டுகளில் லலிதாவின் வயது 10 ஆண்டுகளாகும்.

238. சரவணனுக்கு இப்போது வயது 9 ஆண்டுகளாக இருக்கும் போது சமீனின் வயது 13 ஆண்டுகளாகும். சமீனின் வயது சரவணனின் வயதைவிட இருமடங்காக இருந்தபோது சமீனின் வயது எத்தனை ஆண்டுகளாகும்?

(1) 4 ஆண்டுகள் (2) 6 ஆண்டுகள் (3) 8 ஆண்டுகள்

www.ikeduk

239. சரவணனின் வயதைவிட, சமீனின் வயது மூன்று மடங்காக இருந்தபோது சரவணனின் வயது எத்தனை ஆண்டுகளாகும்?

(1) 2 ஆண்டுகள் (2) 4 ஆண்டுகள் (3) 6 ஆண்டுகள்

240. மனிதன் ஒருவன் படம் ஒன்றைக் காட்டிப் பின்வருமாறு கூறினான். "எனக்கு சகோதரனோ, சகோதரியோ இல்லை. இருந்த போதும் இப்படத்தில் இருப்பவரின் தந்தை எனது தந்தையாரின் புதல்வர் ஆவார்." இம்மனிதன் யாருடைய படத்தைக் காட்டினான்?

(1) தனது தந்கையின் (2) தனது (3) தனது மகளின்

241. இப்போது எனக்கு வயது 11 ஆண்டுகள் ஆகும். எனது தம்பியின் வயது 4 ஆண்டுகள் ஆகும். இன்னும் எத்தனை வருடங்களில் எனது வயது தம்பியின் வயதை விட இருமடங்காக இருக்கும்?

(1) 3 வருடங்களில் (2) 4 வருடங்களில் (3) 8 வருடங்களில்

242. 'எமது விளையாட்டுக் குழுவில் உள்ள எல்லா வீரர்களும் உயரமானவர்கள். தயாபரன் உயரமானவன் எனில், தயாபரன் எமது விளையாட்டுக் குழுவைச் சேர்ந்தவன்' என்னும் கூற்று

(1) சரியானது (2) பிழையானது (3) சரியாகக் கூற முடியாது


243. ஸ்ரீகுமரனினதும் சாந்தனதும் வயதுகளின் கூட்டுத்தொகை 45 வருடங்களாகும். ஸ்ரீகுமரனின் வயது சாந்தனின் வயதிலும் 4 மடங்காயின் சாந்தனின் வயது எத்தனை வருடங்களாகும்?

(1) 10 வருடங்கள் (2) 9 வருடங்கள் (3) 8 வருடங்கள்

244. பிரசன்னா படம் ஒன்றினைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான். "இந்தப் படத்தில் இருப்பவரின் தந்தை எனது அம்மாவின் தந்தை ஆகும்." அப்படியானால் படத்தில் காணப்படுபவருக்கும் பிரசன்னாவிற்கும் இடையில் உள்ள உறவு முறை யாது?

(1) மாமா (2) சிறிய தந்தை (3) பாட்டன்

● ஒரு பாடசாலையின் சில இடங்களின் அமைவையும் அவ்விடங்களுக்குச் செல்வதற்கான பாதைகளையும் காட்டும் படம் கீழே தரப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு **245, 246** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.



245. ஒரு மாணவன் காலையில் பிரதான கதவினூடாகப் பாடசாலைக்குள் பிரவேசிக்கும் போது அவனுடைய வலக்கைப் பக்கத்தில் சூரியன் உதித்துக் கொண்டு இருந்தது. அதற்கு ஏற்ப நூலகம் வகுப்புக்கு எத்திசையில் உள்ளது?

(1) வடக்கு (2) மேற்கு (3) தெற்கு

246. ஒரு மாணவன் பிரதான கதவினூடாகத் தனது வகுப்புக்குச் செல்லும் போது இடப் பக்கத்திற்கும் வலப் பக்கத்திற்கும் திரும்பும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) இடப் பக்கத்திற்கு 3உம் வலப் பக்கத்திற்கு 2 உம்
(2) இடப் பக்கத்திற்கு 2உம் வலப் பக்கத்திற்கு 3 உம்
(3) இடப் பக்கத்திற்கு 4உம் வலப் பக்கத்திற்கு 2 உம்

www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை 5


செயலட்டை - 20

சுட்டெண் : ..... 30 நிமிடம்

247. ஒரு மாணவனின் வீட்டிலிருந்து பாடசாலைக்கு உள்ள தூரம் 500 மீற்றர் ஆகும். அவன் காலையில் பாடசாலைக்குச் செல்லும் போது மொத்தத் தூரத்தில் அரைவாசிக்குச் சென்று திரும்பி வீட்டுக்கு வந்து மறுபடியும் பாடசாலைக்குச் சென்றான். அவன் சென்ற மொத்த தூரம்?


(1) 750 மீற்றர் (2) 1000 மீற்றர் (3) 1250 மீற்றர்

248. ஐந்து சம சதுரங்களை ஒரு நிரையில் வைத்துத் தயார் செய்யப்பட்ட பின்வரும் உருவில் உள்ள செவ்வகத்தின் சுற்றளவு 180 சென்ரிமீற்றர் ஆகும். இங்கு ஒரு சதுரத்தின் பரப்பளவு எத்தனை சதுர சென்ரிமீற்றர்?



(1) 225 (2) 256 (3) 400

249. கீழே தரப்பட்டுள்ள இரு உருக்களுக்கும் ஏற்ப (A) அளவு உள்ள ஓர் அட்டைத்தாளில் இருந்து (B) அளவுள்ள எத்தனை வட்டங்களை உயர்ந்தபட்சம் வெட்டலாம்?



(1) 20
(2) 24
(3) 30

250. கீழே தரப்பட்ட வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

(1) நாம் கடைமைகளை நிறைவேற்றுவோம்.
(2) நாம் கடமைகளை நிறைவேற்றுவொம்.
(3) நாம் கடமைகளை நிறைவேற்றுவோம்.

251. நீளம், அகலம், உயரம் ஆகியன 5cm வீதம் உள்ள ஒரு மரச் சதுரமுகியிலிருந்து நீளம்,அகலம், உயரம் ஆகியன 1cm வீதம் உள்ள எத்தனை சிறிய சதுரமுகிகளை வெட்டலாம்?

(1) 125 (2) 25 (3) 15

252. ஒரு பாத்திரத்தில் 1.5 லீற்றர் நீர் உள்ளது. அப்பாத்திரத்தில் உள்ள ஒரு சிறிய துவாரத்திலிருந்து ஒவ்வொரு நிமிடமும் 50 மில்லிலீற்றர் நீர் கசிந்து வெளியேறுகின்றது. அதற்கு ஏற்ப அப்பாத்திரம் முற்றாக வெறுமையாவதற்கு எடுக்கும் நேரம் எத்தனை நிமிடம்?

(1) 20 (2) 30 (3) 40

253. 4 பிள்ளைகளுக்கும் 3 வயது வந்தவர்களுக்கும் பால் தேநீர் வழங்குவதற்கு ஒரு லீற்றர் பால் தேவைப்பட்டது. அதற்கேற்ப 20 பிள்ளைகளுக்கும் 15 வயது வந்தவர்களுக்கும் பால் தேநீர் வழங்குவதற்கு எத்தனை லீற்றர் பால் தேவை?

(1) 5 (2) 7 (3) 15

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்


தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 21


சுட்டெண் : ..... 30 நிமிடம்

254. இவ்விரு பாத்திரங்களை மாத்திரம் பயன்படுத்தி 4 லீற்றர் நீரைச் சரியாக அளக்க முடியுமா?



(1) முடியும்
(2) முடியாது
(3) விடையளிப்பதற்கு மேலும் தகவல்கள் தேவை

255. உருவில் உள்ள A, B, C என்னும் வட்டங்கள் ஒன்றையொன்று ஒத்தவை ஆகும். A, B, C மூன்றுக்கும் பொதுவான எண் யாது?



(1) 10
(2) 12
(3) 15


256. ஓர் இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்த சிறுவன் ஒருவன் 20 மீற்றர் தெற்கு நோக்கியும் அவ்விடத்திலிருந்து 10 மீற்றர் கிழக்கு நோக்கியும் மீண்டும் 15 மீற்றர் வடக்கு நோக்கியும் சென்று, அவ்விடத்திலிருந்து மேற்கு நோக்கி 10 மீற்றர் சென்று பயணத்தை முடித்தான். அச்சிறுவன் இப்போது தொடக்க இடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளான்?

(1) 15 மீற்றர் (2) 10 மீற்றர் (3) 5 மீற்றர்

257. ஒரு தொட்டியின் கொள்ளளவு 10 லீற்றர் ஆகும். ரஞ்சன் ஒரு தடவைக்கு நான்கு லீற்றர் வீதம் இட்டு அத்தொட்டியில் நீரை நிரப்புகின்றார். ஒவ்வொரு தடவைக்கும் பின்னர் அவருடைய தம்பி இரண்டு லீற்றர் வீதம் அந்நீரை வெளியே எடுக்கின்றார். ரஞ்சன் எத்தனை தடவை நீரை இட்ட பின்னர், முதன் முதலாகத் தொட்டி நிரம்பும்?

(1) 4 (2) 5 (3) 6

● ஓர் அடைப்பின் ஒரு பக்கத்தின் நீளம் 10 மீற்றர் ஆக இருக்குமாறு வரையப்பட்டுள்ள ஒரு பாதை நெய்யரி கீழே காணப்படுகிறது.



258. மேற்குறித்த பாதை நெய்யரியில் கமலா A யிலிருந்து D யினூடாக B யிற்கும் முரளி B யிலிருந்து C யினூடாக A யிற்கும் பயணஞ் செய்தனர். இதற்கேற்ப,


(1) கமலாவும் முரளியும் ஒரே அளவு தூரத்திற்குப் பயணஞ் செய்துள்ளனர்.
(2) முரளி கமலாவிலும் கூடுதலான தூரம் பயணஞ் செய்துள்ளான்.
(3) இருவரும் பயணஞ் செய்த மொத்தத் தூரம் 220 மீற்றர் ஆகும்.

www.ikedu.lk


259. மேற்குறித்த பாதை நெய்யரியில் A யிலிருந்து C யினூடாக E வரையுள்ள மிகக் குறுகிய தூரம்,

(1) 50 மீற்றர் (2) 90 மீற்றர் (3) 100 மீற்றர்


260. சிறுவன் ஒருவன் ஒரு பூப்பாத்தியை அமைப்பதற்கு ஓர் இடத்திலிருந்து வடக்கு நோக்கி 3 மீற்றருக்கும் அவ்விடத்திலிருந்து கிழக்கு நோக்கி 3 மீற்றருக்கும் அவ்விடத்திலிருந்து தெற்கு நோக்கி 6 மீற்றருக்கும் அவ்விடத்திலிருந்து தொடக்கத் தானத்திற்கும் ஒரு கயிற்றை இழுத்துத் தரையில் அடையாளமிட்டான். அப்பூப்பாத்தியின் வடிவத்தைத் தெரிவு செய்க.



(1)




(2)



(3)

261. முழு உருவத்தினதும் பரப்பளவு அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவின் எத்தனை மடங்காகும்?




(1) 8

(2) 10

(3) 12

262. முழு உருவத்தினதும் சுற்றளவு அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் சுற்றளவின் எத்தனை மடங்காகும்?



(1) 3

(2) 4

(3) 6

263. A யின் தந்தை B யின் மகனெனின், A ஆனவர் B யிற்கு என்ன உறவுமுறை?

(1) பேரன் (2) பாட்டன் (3) மகன்

264. ஒரு பேருந்து, ஒரு லொறி, ஒரு மோட்டார் கார் ஆகியன 150 கிலோமீற்றர் தூரம் செல்வதற்கு ஒரே இடத்திலிருந்து புறப்பட்டன. அவை புறப்பட்ட நேரங்களும் சென்ற கதிகளும் கீழே காணப்படுகின்றன.

வாகனம்	புறப்பட்ட நேரம்	கதி(மணித்தியாலத்துக்கு கிலோமீற்றர்)
பேருந்து	காலை 6.00	50
லொறி	காலை 7.00	30
மோட்டார் கார்	காலை 8.00	75

அவை சேர வேண்டிய இடத்தை என்ன ஒழுங்குமுறையில் அடைந்தன?

(1) மோட்டார்க் கார், பேருந்து, லொறி

(2) பேருந்து, லொறி, மோட்டார்க் கார்

(3) பேருந்து, மோட்டார்க் கார், லொறி

265. ஒரு கயிறு இரு சம பகுதிகளாக வெட்டப்பட்டு, அவற்றில் ஒரு பகுதி மறுபடியும் நான்கு சம துண்டுகளாக வெட்டப்பட்டது. அத்துண்டுகளில் ஒன்றின் நீளம் 1 மீற்றர் எனின், தொடக்கத்தில் இருந்த கயிற்றின் நீளம்,

(1) 8 மீற்றர் (2) 5 மீற்றர் (3) 4 மீற்றர்

www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்


தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 22

சுட்டெண் : ..... 30 நிமிடம்

266. நிழற்றப்பட்ட பகுதி முழு உருவத்தின்,




(1) $\frac{1}{4}$ இலும் குறைவாகும்.

(2) $\frac{1}{4}$ இற்குச் சமம்.

(3) $\frac{1}{4}$ இலும் கூடியதாகும்.

267. முழு உருவத்தினதும் பரப்பளவு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவின்,



(1) இரு மடங்காகும்.

(2) மூன்று மடங்காகும்.

(3) நான்கு மடங்காகும்.

268. சம கனவளவுகளைக் கொண்ட பால் உள்ள குவளையையும் நீர் உள்ள குவளையையும் எடுத்து, பால் குவளையிலிருந்து 10 மில்லிலீற்றரை நீர்க் குவளைக்குள்ளே விட்டுக் கலக்கி, அக்கலவையிலிருந்து 10 மில்லிலீற்றர் மறுபடியும் பாற் குவளைக்குள் இடப்பட்டது. இப்போது குவளையில் இருக்கும்,

(1) பாலில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை.


(2) நீரில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை.

(3) பாலில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

269. ஒரு வாகனம் ஒரு லீற்றர் பெற்றோலில் 10 கிலோமீற்றர் செல்கின்றது. 10 லீற்றர் பெற்றோலை நிரப்பிக்கொண்டு பயணத்தை ஆரம்பித்த வாகனம் 60 கிலோமீற்றர் சென்றது. எஞ்சியிருக்கும் பெற்றோலில் வாகனம் எத்தனை கிலோமீற்றர் செல்லும்?

(1) 60 (2) 40 (3) 30

● ஒவ்வொன்றும் 1 சதுர சென்ரிமீற்றர் பரப்பளவுள்ள 16 சதுரங்களைப் பின்வரும் உரு கொண்டுள்ளது.



270. அதில் நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு எத்தனை சதுர சென்ரிமீற்றர்?

(1) 8 (2) 10 (3) 12

271. அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு மொத்தப் பரப்பளவில் என்ன பின்னம்?

(1) $\frac{1}{4}$ (2) $\frac{1}{2}$ (3) $\frac{3}{4}$

www.ikedu.lk


272. இரு மனிதர்கள் ஒரே நேரத்தில் ஒரே இடத்திலிருந்து எதிர்த்திசைகளில் செல்ல ஆரம்பித்து முதலில் 5 மீற்றர் வீதம் சென்று தமது வலக்கைப் பக்கத்திற்குத் திரும்பி மேலும் 5 மீற்றர் வீதம் சென்றனர். பின்னர் இருவரும் தமது லக்கைப் பக்கத்திற்குத் திரும்பி மேலும் 5 மீற்றர் வீதம் சென்றனர். இப்போது அவர்கள் இருவரும் இருப்பது

(1) ஒருவரிலிருந்து மற்றவர் 5 மீற்றர் தூரத்தில்
(2) ஒருவரிலிருந்து மற்றவர் 10 மீற்றர் தூரத்தில்
(3) ஆரம்பித்த இடத்தில்

273. ஒரு புகையிரதம் 45 ஆவது கிலோமீற்றர் கல்லிலிருந்து 50 ஆவது கிலோமீற்றர் கல்லைக் கடப்பதற்கு 5 நிமிடம் எடுத்தது. புகையிரதம் அதே கதியில் சென்றால் 80 ஆவது கிலோமீற்றர் கல்லைக் கடப்பதற்கு மேலும் எவ்வளவு நிமிடம் எடுக்கும்?

(1) 80 (2) 50 (3) 30

● A, B என்னும் நகரங்களுக்கிடையே உள்ள தூரம் 10 கிலோமீற்றர் ஆகும். ஒரு குறித்த நாளில் முற்பகல் 6.00 இற்கு முகுந்தன் A யிலிருந்து ஆரம்பித்து மணித்தியாலத்திற்கு 3 கிலோமீற்றர் என்னும் வீதத்தில் B யை நோக்கிச் செல்கிறான். மோகன் அதே நேரத்தில் B யிலிருந்து ஆரம்பித்து மணித்தியாலத்திற்கு 2 கிலோமீற்றர் என்னும் வீதத்தில் A யை நோக்கிச் செல்கின்றான்.




274. முகுந்தனும் மோகனும் சந்திப்பது A யிலிருந்து

(1) 3 கிலோமீற்றர் தூரத்தில் (2) 5 கிலோமீற்றர் தூரத்தில் (3) 6 கிலோமீற்றர் தூரத்தில்

275. முகுந்தனும் மோகனும் சந்திக்கும் போது நேரம் யாது?

(1) முற்பகல் 7.00 (2) முற்பகல் 8.00 (3) முற்பகல் 9.00

● சிறுபிள்ளைகள் சைக்கிள் ஓடுவதற்காக ஒரு விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள சில பாதைகளை காட்டும் படம் கீழே தரப்பட்டுள்ளது. அதில் ஒவ்வொரு சிறிய சதுரங்களினதும் ஒரு பக்கத்தின் நீளம் 1 சென்ரிமீற்றர் ஆகும். 1 சென்ரிமீற்றரினால் 10 மீற்றர் தூரம் காட்டப்படுகின்றது.



276. ஒரு பிள்ளை இடம் A யிலிருந்து ஆரம்பித்து K, L, B ஆகியவற்றைக் கடந்து C யிற்குச் சென்று வலப் பக்கமாகத் திரும்பி முறையே F, E, C, B, J, D ஆகியவற்றைக் கடந்து D யிற்கு வருகின்றது. அது சைக்கிள் ஓடும் தூரம் எத்தனை மீற்றர்?

(1) 210 மீற்றர் (2) 240 மீற்றர் (3) 280 மீற்றர்

277. ஒரு பிள்ளை இடம் I யிலிருந்து ஆரம்பித்து K யினூடாக H இற்குச் சென்று இடப் பக்கமாகத் திரும்பி M இனூடாக F, E, C, B, J, D ஆகியவற்றைக் கடந்து மறுபடியும் I யிற்கு வருகின்றது. அது சைக்கிள் ஓடும் தூரம் எத்தனை மீற்றர்? (1) 210 மீற்றர் (2) 240 மீற்றர் (3) 280 மீற்றர்

www.ikedu.lk



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021


அறிவுத்தாரகை

5

செயலட்டை - 23

சுட்டெண் : ..... 30 நிமிடம்

● ஒரு குறித்த நகரில் பாடசாலை, மருத்துவமனை, பேருந்துத் தரிப்பிடம், புகையிரத நிலையம், ஆகியன அமைந்துள்ள விதமும் அவற்றை இணைக்கும் வீதிகளும் உருவில் காணப்படுகின்றன. அத்தகவல்களுக்கு ஏற்ப **278, 279** ஆகிய வினாக்களுக்கு விடை எழுதுக.



278. எந்த ஓர் இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்தால் ஏனைய மூன்று இடங்களுக்கும் குறைந்த அளவு தூரத்தில் செல்லத்தக்கதாக இருக்கும்?

(1) பாடசாலை அல்லது பேருந்துத் தரிப்பிடம்
(2) பாடசாலை அல்லது மருத்துவமனை
(3) பேருந்துத் தரிப்பிடம் அல்லது மருத்துவமனை

279. ஒரு பிள்ளை பாடசாலையிலிருந்து ஏனைய மூன்று இடங்களுக்கும் குறைந்த அளவு தூரத்தில் சென்றால், அது சென்ற மொத்தத் தூரம் எத்தனை மீற்றர்?

(1) 800 (2) 900 (3) 1100

280. குமரன், சுதன் ஆகிய இருவரும் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் ஒரே இடத்தில் அமர்ந்திருந்தனர். குமரன் அவ்விடத்திலிருந்து முதலில் வடக்கு நோக்கி 50 மீற்றரும் பின்னர் வலக் கைப் பக்கத்துக்குத் திரும்பி 100 மீற்றரும் சென்றான். சுதன் முதலில் மேற்கு நோக்கி 25 மீற்றரும் பின்னர் தனது வலக் கைப் பக்கத்திற்குத் திரும்பி 50 மீற்றரும் சென்றான். இப்போது அவர்கள் இருவருக்கும் இடையே உள்ள தூரம் எவ்வளவு?

(1) 75 மீற்றர் (2) 125 மீற்றர் (3) 225 மீற்றர்

281. ஒரு பிள்ளை தனது வீட்டிலிருந்து சந்தைக்குச் சென்றபோது மருத்துவமனையையும் பாடசாலையையும் கடந்து செல்ல நேரிட்டது. வீட்டிலிருந்து பாடசாலைக்குள்ள தூரம் வீட்டிலிருந்து மருத்துவமனைக்குள்ள தூரத்தின் இரு மடங்காகும். மருத்துவமனையிலிருந்து சந்தைக்குள்ள தூரம் மருத்துவமனையிலிருந்து பாடசாலைக்குள்ள தூரத்தின் இருமடங்காகும். இதற்கேற்ப பின்வருவனவற்றில் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

(1) வீட்டிலிருந்து மருத்துவமனைக்குள்ள தூரம் பிள்ளை சென்ற மொத்தத் தூரத்தின் $\frac{1}{2}$ ஆகும்.
(2) மருத்துவமனையிலிருந்து பாடசாலைக்குள்ள தூரம் பிள்ளை சென்ற மொத்தத் தூரத்தின் $\frac{1}{3}$ ஆகும்.
(3) மருத்துவமனைக்கும் சந்தைக்கும் நடுவில் பாடசாலை உள்ளது.

282. இரண்டு மோட்டார் வண்டிகள் ஓர் இடத்திலிருந்து புறப்பட்டுப் பின்னர் அவை ஒவ்வொன்றும் எதிர்த் திசைகளில் 100 மீற்றர் தூரம் செல்கின்றன. பின்னர் ஒரு வண்டி வலப்பக்கமும் மற்றைய வண்டி இடப்பக்கமும் திரும்பி ஒவ்வொன்றும் 200 மீற்றர் தூரம் செல்கின்றன. இப்போது இரண்டு வண்டிகளுக்கும் இடையே உள்ள தூரம் எவ்வளவு?

(1) 600 மீற்றர் (2) 300 மீற்றர் (3) 200 மீற்றர்

www.ikeduk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்


தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை 5


செயலட்டை - 24

சுட்டெண் : ..... 30 நிமிடம்


283. மூன்று கம்பிச் சட்டங்கள் கீழே காணப்படுகின்றன. முனை P இல் இருக்கும் ஓர் எறும்பு ஒரே பாதையில் இரு தடவைகள் செல்லாமல் எல்லாப் பாதைகளிலும் செல்லத்தக்க சட்டம் யாது?



(1)



(2)



(3)

284. பின்வரும் ஒளிப்படத்தைப் பார்க்க. அந்த ஒளிப்படம் நாளின் எந்நேரத்தில் எடுக்கப்பட்டது என்பதைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்க.




(1) மு.ப. 6.00 அளவில்
(2) மு.ப. 10.00 அளவில்
(3) நண்பகல் 12.00 அளவில்

285. ஒரு நகரத்தில் பேருந்துத் தரிப்பிடம் மணிக்கூட்டுக் கோபுரத்திலிருந்து 60 மீற்றர் கிழக்கேயும் பொலிஸ் நிலையம் மணிக்கூட்டுக் கோபுரத்திலிருந்து 80 மீற்றர் தெற்கேயும் பாடசாலை பொலிஸ் நிலையத்திலிருந்து 60 மீற்றர் கிழக்கேயும் உள்ளன. இதற்கேற்ப பேருந்துத் தரிப்பிடம் இருப்பது பாடசாலையிலிருந்து,

(1) 80 மீற்றர் தெற்கே (2) 80 மீற்றர் வடக்கே (3) 60 மீற்றர் வடக்கே

● பின்வரும் உருவைப் பயன்படுத்தி **286, 287** ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

இவ்வுருவில் இரு நகரங்களில் உள்ள இரு பாதைகளின் படங்கள் காணப்படுகின்றன. இல. 1 பேருந்துத் தரிப்பிடத்தையும் இல. 2 பாடசாலையையும் இல. 3 மருத்துவமனையையும் இல. 4 நூலகத்தையும் குறிப்பிடுகின்றன.



286. A தனது வீட்டிலிருந்து இப்பாதை வழியே எவ்விடத்துக்குச் செல்வதற்குக் குறைந்த தடவைகள் இடப் பக்கமாகத் திரும்ப வேண்டும்?

(1) பேருந்துத் தரிப்பிடம் (2) பாடசாலை (3) நூலகம்

287. B தனது வீட்டிலிருந்து இப்பாதை வழியே சென்றால், எவ்விடத்திற்குச் செல்வதற்குக் கூடிய தடவைகள் வலப்பக்கமாய் திரும்ப வேண்டும்?

(1) மருத்துவமனை (2) பாடசாலை (3) நூலகம்

288. விமலா காலையில் பாடசாலைக்குச் செல்லும் போது அவளது நிழல் அவளது வலக் கைப்பக்கத்தில் விழுவதைக் காணக் கூடியதாக இருந்தது. அவ்வாறெனில் அவள் எத்திசையை நோக்கிச் சென்றாள்?

(1) வடக்கு (2) மேற்கு (3) தெற்கு

289. ரமணன் தனது வீட்டிலிருந்து வடக்கு நோக்கிச் சிறிது தூரம் சென்ற பின் வலது கைப்பக்கம் திரும்பிச் சிறிது தூரம் சென்றான். பின்பு வலது கைப் பக்கம் திரும்பிச் சிறிது தூரம் சென்று, மீண்டும் வலது கைப்பக்கம் திரும்பி சிறிது தூரம் சென்ற பின் இறுதியில் இடது பக்கம் திரும்பினான். இப்போது ரமணன் எந்தத் திசையை நோக்கி நிற்கின்றான்?

(1) வடக்குத்திசை (2) மேற்குத்திசை (3) தெற்குத்திசை

290. சதுர வடிவமான மரக்கறித்தோட்டம் ஒன்றின் ஒரு பக்கத்தின் நீளம் 12 மீற்றர் ஆகும். அதன் எல்லை வழியே 3 மீற்றர் இடைத்தூரங்களில் கம்பித்தூண்கள் உள்ளன. அவ்வாறு உள்ள கம்பித் தூண்களின் எண்ணிக்கை யாது?

(1) 20 (2) 16 (3) 12

291. இலக்கங்களுக்குப் பதிலாகக் குறியீடுகளை இட்டு அறுநூற்று முப்பத்தெட்டு பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

638 ⟶ * # ⊙

இக்குறியீடுகளைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க பெரிய எண்ணைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) ⊙ * # (2) * ⊙ # (3) ⊙ # *

292. நான் ஒரு பேருந்தில் ஏறுவதற்காக நிரையில் நின்றேன். எனக்கு முன்னால் 6 ஆட்களும் எனக்குப் பின்னால் 4 ஆட்களும் நின்றனர். எனது நண்பர் நிரையில் நடுவில் நின்றால், அவர் நிரையில் எத்தனையாவது ஆளாக நின்றார்?

(1) 5 ஆம் ஆள் (2) 6 ஆம் ஆள் (3) 7 ஆம் ஆள்

293. நிமலன், நாதன், மீனா, குமாரி என்ற நான்கு மாணவர்களில் இருவரை ஆசிரியை தெரிவு செய்ய வேண்டியுள்ளது. ஆசிரியை அதனை ஒன்றிலிருந்தொன்று வேறுபட்ட எத்தனை விதங்களில் செய்யலாம்?

(1) 2 (2) 4 (3) 6

294. 49 தொடக்கம் 99 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும் போது இலக்கம் 5 ஐ எழுத வேண்டிய தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 10 (2) 14 (3) 15

295. 4 * 2 = 4 # 2 என்னும் கணிதத் தொடர்புரிமையில் *, # என்னும் குறியீடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள இரு கணிதச் செய்கைகளும் யாவை?

(1) + உம் X உம் (2) + உம் ÷ உம் (3) – உம் ÷ உம்

www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 25

சுட்டெண் : ..... 30 நிமிடம்

296. ஒரு பணப் பையில் ரூ. 640 பணம் நான்கு நாணயத் தாள்களாக உள்ளது. அவை

(1) ரூ. 500, ரூ. 100, ரூ. 20 ஆகியன உட்பட 4 நாணயத் தாள்கள்

(2) ரூ. 500, ரூ. 20, ஆகியன உட்பட 4 நாணயத் தாள்கள்

(3) ரூ. 500, ரூ. 50, ரூ. 20 ஆகியன உட்பட 4 நாணயத் தாள்கள்

297. நாமகன் வித்தியாலயம் மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தில் அட்ட கல்வி வலயத்தில் அமைந்துள்ளது. இவை கீழுள்ளவாறு குறியீடுகளினால் காட்டப்படுகின்றன.

வலயம் =  மாகாணம் =  மாவட்டம் =  பாடசாலை = 

பாடசாலையின் அமைவிடத்தைச் சரியாகக் காட்டும் வரிப்படத்தைத் தெரிவு செய்க.



(1)



(2)



(3)

298. மல்வானை, கம்பளை, கந்தானை என்னும் சொற்கள் 2109, 2735, 6489 ஆகிய இலக்கங்களைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளன எனில், கந்தானை என்னும் சொல்லை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட இலக்கங்கள் யாவை? விடையை எழுதுக.

: .....

299. ஒரு பெருந்தெருவினை மூன்று கட்டங்களில் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. முதலாம், இரண்டாம் கட்ட வேலைகளைச் செய்வதற்கு எடுக்கும் காலத்தின் அரைவாசிக் காலம் மூன்றாம் கட்ட வேலைகளைச் செய்வதற்கு எடுக்குமெனத் திட்டமிடப்பட்டது. அப்பெருந்தெருவை அமைக்கும் பணிகள் 2000 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டு முதலாம், இரண்டாம் கட்ட அமைப்புப் பணிகள் 2005 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தியாக்கப்பட்டன. இப்பெருந்தெருவைத் திட்டமிட்டபடி அமைக்கும் பணி எந்த ஆண்டின் இறுதியில் முழுமையாகப் பூர்த்தியாக்கப்படும்?


: .....

300. உணவு, சிற்றுண்டி, லட்டு என்பவற்றுக்கிடையிலான தொடர்பினைக் காட்டுவதற்குப் பின்வரும் உரு வரையப்பட்டுள்ளது. இதில் A இனால் காட்டப்படுவது யாது?

(1) உணவு

(2) சிற்றுண்டி

(3) லட்டு



STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்


WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

301. காய்கறி, பழங்கள், கொய்யாப்பழம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பினைக் காட்டுவதற்குப் பின்வரும் உரு வரையப்பட்டுள்ளது. இந்த உருவில் காய்கறியைக் காட்டும் எழுத்து யாது?

(1) X
(2) Y
(3) Z



302. ஒரு பிள்ளை நாற்றுமேடையிலிருந்து வாங்கிய மரக்கன்றுகள் பற்றிய பின்வரும் விவரத்தை முன்வைத்தான்.

பழமரக் கன்றுகள்	- 10	பழமரங்களல்லாத கன்றுகள்	- 12
மாங் கன்றுகள்	- 2	தென்னங் கன்றுகள்	- 4

இதன்படி அவன் வாங்கிய மொத்த மரக் கன்றுகள் எத்தனை?

(1) 16 (2) 22 (3) 28

303. குகன் நின்ற வரிசையில் அவனுக்கு முன்னால் எட்டுப் பேர் நின்றனர். வரிசையின் கடைசியில் நின்றவர் முதலாவது நபராக வரும் வகையில் அனைவரும் மறுபக்கத்திற்குத் திரும்பினர். அப்போது குகனின் முன்னால் மூவர் நின்றனர் எனின், அவ்வரிசையில் மொத்தமாக எத்தனை பேர் நின்றனர்?

(1) 10 பேர் (2) 11 பேர் (3) 12 பேர்


304. ஒரு வாங்கில் பெண் பிள்ளைகள் வரிசையாக அமர்ந்திருந்தனர். ஒரு பக்கத்திலிருந்து கணக்கிடும் போது ரூபி 13 ஆவதாக அமர்ந்திருந்தாள். மறுபக்கத்திலிருந்து கணக்கிடும் போது அவள் 6 ஆவதாக அமர்ந்திருந்தாள். வாங்கில் எத்தனை பெண் பிள்ளைகள் அமர்ந்திருந்தனர்?

(1) 18 (2) 19 (3) 21

305. எனது சட்டைப் பையில் மூன்று வகையான 9 நாணயங்கள் இருக்கின்றன. அவற்றின் மொத்தம் ரூபா 24 ஆகும். எனது பையில் இருக்கும் நாணயங்கள் யாவை?

(1) ரூபா 5 நாணயங்கள் 2, ரூபா 2 நாணயங்கள் 4, ஒரு ரூபா நாணயங்கள் 3
(2) ரூபா 5 நாணயங்கள் 3, ரூபா 2 நாணயங்கள் 2, ஒரு ரூபா நாணயங்கள் 4
(3) ரூபா 5 நாணயங்கள் 3, ரூபா 2 நாணயங்கள் 3, ஒரு ரூபா நாணயங்கள் 3

306. உருவில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு பிள்ளை சதுர வடிவில் ஒரு பூம்பாத்தியைத் தயார் செய்து அதனைச் சுற்றி ஒரு வேலியை அமைத்தது. அம்புக்குறியினால் காட்டப்படும் யாதாயினும் ஒரு திசை வழியே பார்க்கும் போது அப்பக்கத்தில் 10 கம்பங்கள் காணப்படுமெனில், இவ்வேலிக்குப் பயன்படுத்தப்பட்ட கம்பங்களின் எண்ணிக்கை யாது?



(1) 36 (2) 40 (3) 44

● கீழே தரப்பட்டுள்ள இலக்கங்களினதும் எழுத்துக்களினதும் நிரையைக் கொண்டு **307** ஆம் **308** ஆம் **309** ஆம் வினாக்களுக்கு உரிய விடையைத் தெரிவு செய்க.

5 5 K 6 6 J K K 5 S J 5 B J 8 J R R 6 5 K R K 6 J J 6 S S 6 J J

307. இலக்கங்களும் எழுத்துக்களும் உள்ள இந்நிரையில் எத்தனை J எழுத்துக்கள் உள்ளன?

(1) 10 (2) 9 (3) 8

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 26

சுட்டெண் : ..... 30 நிமிடம்

308. இங்கு மிகக் குறைவாகக் காணப்படுவது எது?

(1) இலக்கம் 8 (2) எழுத்து K (3) இலக்கம் 6

309. இங்கு ஒரு இலக்கத்திற்கு முன்னும் பின்னும் ஒரேவகை எழுத்துக் காணப்படுகிறது. அந்த எழுத்து யாது?

(1) எழுத்து J (2) எழுத்து K (3) எழுத்து R

310. 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 என்ற இலக்கங்களைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளது. கீழே தரப்பட்டுள்ள மஹரகம என்ற சொல் எழுதப்பட்டுள்ள முறை யாது?

(1) 4, 2, 6, 1, 4 (2) 4, 2, 3, 2, 1 (3) 6, 3, 4, 2, 3


311. ஒரு புலமைப் பரிசில் பரீட்சையில் இத்தகைய ஒரு வினா காணப்பட்டது. "மருதம் - தர்மம்" என்ற இரு சொற்களும் ஒரே எழுத்துக்களைக் கொண்டன எனில், முதலாவது சொல்லில் உள்ளதும் இரண்டாவது சொல்லில் இல்லாததுமான எழுத்தினை இனங்கண்டு எதிரே உள்ள கூட்டினுள் எழுதுக.

(.....)

312. 1 தொடக்கம் 25 வரையுள்ள எல்லா ஒற்றை எண்களையும் எழுதும் போது இலக்கம் 1 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 7 (2) 8 (3) 13


313.



இவ்வுருவில் 3/5 பகுதியை நிழற்றுவதற்காக நிறந்தீட்டப்பட்டுள்ள கட்டங்களுக்கு மேலதிகமாக இன்னும் எத்தனை கட்டங்களை நிறந்தீட்ட வேண்டும்?

(1) 8 (2) 10 (3) 12

314.



பின்வரும் உருவில் கமலன் உட்பட 20 மாணவர்கள் வட்டமாக அமர்ந்திருக்கும் விதம் காட்டப்பட்டுள்ளது. அவர்கள் எல்லோரும் கமலனிலிருந்து முறையே 1, 2, 3, 1, 2, 3, ... எனக் கூறியவாறு வட்டத்தைச் சுற்றி இரு தடவைகள் எண்ணுகின்றனர். இவ்வாறு முதற் சுற்றில் 1 எனக் கூறி என்னும் கமலன் இரண்டாம் சுற்றில் எண்ணும் போது கூறும் இலக்கம் யாது?

(1) 1 (2) 2 (3) 3

315. ஒரு மாம்பழத்தின் விலை ரூ. 25 ஆகும். ஓர் அப்பிள் பழத்தின் விலை ரூ. 40 ஆகும். மாம்பழம், அப்பிள் பழம் ஆகியவற்றின் ஒரு குறித்த எண்ணிக்கையை வாங்குவதற்குக் கீதா செலவிட்ட பணம் ரூ. 205 ஆகும். கீதா வாங்கிய மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?

(1) 2 (2) 4 (3) 5

www.ikedu.lk

316. ஒரு குறித்த நகரத்தில் விளையாட்டு மைதானத்திற்கு வடக்கே பாடசாலை உள்ளது. விளையாட்டு மைதானத்திற்குத் தெற்கே நூலகம் உள்ளது எனின்,

(1) நூலகத்திற்குத் தெற்கே பாடசாலை உள்ளது.
(2) பாடசாலைக்கும் விளையாட்டு மைதானத்திற்கும் இடையே நூலகம் உள்ளது.
(3) பாடசாலைக்குத் தெற்கே நூலகம் உள்ளது.

317. △ X □ = 60 ஆகவும், △ − □ = 7 ஆகவும் இருப்பின், △ + □ இன் பெறுமானம் யாது?
(1) 15 (2) 16 (3) 17


318. சங்கரி முதல் நாளில் ஓர் உண்டியலில் ரூ. 10 ஐ இடுகிறாள். அவள் அதன் பின்னர் ஒவ்வொரு நாளும் முந்திய நாளில் இட்ட பணத்திலும் பார்க்க ரூ. 10 வீதம் கூடுதலாக உண்டியலில் இடுகின்றாள். இவ்வாறாக உண்டியலில் சேரும் மொத்தப் பணம் எத்தனையாம் நாளில் முதன் முதலாக ரூ. 500 இலும் கூடுதலாக இருக்கும்?
(1) 8 (2) 9 (3) 10

319. இரு வெற்றுக் கட்டங்களுக்கும் பொருத்தமான இரு கணிதச் செய்கைகளையும் முறையே தெரிவு செய்க.
343 □ 7 = 7 □ 7
(1) +, X (2) ÷, X (3) X, ÷

320. ஒரு பாடசாலையில் ஒரு குறித்த விழாவின் தொடக்கத்தில் 9 மெழுகுவர்த்திகள் கொழுத்துவதற்குத் தயார் செய்யப்பட்டுள்ளன. ஒரு மெழுகுவர்த்தி ஒளிரும் நேரம் 30 நிமிடம் ஆகும். 9 மெழுகுவர்த்திகளை ஒரே தடவையில் கொழுத்தினால், அவை எல்லாம் எவ்வளவு நேரத்திற்கு ஒளிரும்?
(1) 30 நிமிடம் (2) 270 நிமிடம் (3) 300 நிமிடம்

321. தேகாரோக்கியத்துடன் இருக்கும் ஒரு யானைக் கூட்டத்தில் உள்ள யானைகளின் தந்தங்களினதும் கால்களினதும் கூட்டுத்தொகை 132 ஆகும். அக்கூட்டத்தில் உள்ள யானைகளின் மொத்த எண்ணிக்கை யாது?
(1) 22 (2) 32 (3) 66

322. A, B, C, D என்னும் ஒவ்வொரு முக்கோணியிலும் உள்ள மிகப் பெரிய இலக்கத்தைப் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகச் சிறிய எண் யாது?
(1) 9765 (2) 5679 (3) 2348



323. ஒரு பேருந்தில் இருவர் வீதம் அமரத்தக்க 15 பயணி ஆசனங்களும் ஆறு பயணிகள் அமரத்தக்க ஒரு பயணி ஆசனமும் உள்ளன. அப்பேருந்தில் அமர்ந்து செல்லத்தக்க பயணிகளின் மிகவும் கூடிய எண்ணிக்கை யாது?
(1) 21 (2) 36 (3) 42

324. 1 தொடக்கம் 100 வரை எண்களை எழுதும்போது இலக்கம் 2 எத்தனை தடவைகள் எழுதப்பட வேண்டும்?
(1) 10 (2) 19 (3) 20

www.ikedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 27

சுட்டெண் : ..... 30 நிமிடம்


325. ஒரே இலக்கம் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் இருக்கத்தக்கதாக 20 அட்டைகளில் ஓர் இலக்கம் வீதம் எழுதப்பட்டுள்ளது. 10 அட்டைகளில் இருக்கும் இலக்கங்களின் கூட்டுத்தொகை 12 ஆகும். எஞ்சியுள்ள 10 அட்டைகளில் இருக்கும் இலக்கங்களின்கூட்டுத்தொகைக்கு இருக்கத்தக்க ஆகவும் கூடிய பெறுமானம்?

(1) 20 (2) 60 (3) 90

326. இரு சமச்சீர்க் கோடுகளை மாத்திரம் கொண்ட உருவைத் தெரிவு செய்க.



(1)



(2)



(3)

327. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நான்கு கால் கதிரைகள் நான்கு உள்ளன. கால்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 16 (2) 19 (3) 20

328. ஒரு சைக்கிளை வாங்குவதற்கு ரூ. 8500 தேவைப்பட்டது. என்னிடம் ரூ. 4800 இருந்தது. மீதியை இரு நண்பர்களிடமிருந்து பெற்றுக் கொண்டேன். பெற்றுக் கொண்ட பணம்.

(1) ரூ. 2400 உம் ரூ. 1300 உம் ஆகும்.

(2) ரூ. 2500 உம் ரூ. 2300 உம் ஆகும்.

(3) ரூ. 5200 உம் ரூ. 3300 உம் ஆகும்.

329. ஒரு பேருந்தில் சென்ற ஒரு மாணவன் தனது பயணச் சீட்டுக்காக நடத்துநரிடம் ரூ. 20 ஐ வழங்கியபோது நடத்துநர் அம்மாணவரிடம் மேலும் ரூ. 2 ஐப் பெற்று ரூ. 10 ஐ மீதியாகக் கொடுத்தார். பேருந்துக் கட்டணம் எவ்வளவு?

(1) ரூ. 10 (2) ரூ. 12 (3) ரூ. 14

330. 100 தொடக்கம் 110 வரையுள்ள எண்களை எழுதும்போது '0' எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை.

(1) 9 (2) 10 (3) 12

331. 4, 5 என்னும் இரு எண்களினாலும் மீதியின்றி வகுக்கப்படக் கூடியனவும் 25 இற்கும் 75 இற்கும் இடையே உள்ளனவுமான எண்களின் எண்ணிக்கை எத்தனை?

(1) 2 (2) 4 (3) 5

332. ஒரு வீட்டில் தொலைக்காட்சி பி.ப. 1.00 தொடக்கம் பி.ப. 3.15 வரைக்கும் கணினி பி.ப. 2.15 தொடக்கம் பி.ப. 3.30 வரைக்கும் மின்விசிறி பி.ப. 2.30 தொடக்கம் பி.ப. 3.45 வரைக்கும் தொழிற்பட்டன. எனின், மூன்றும் ஒன்றாக தொழிற்பட்ட நேரம்?

(1) 45 நிமிடம் (2) 1 மணித்தியாலம் (3) 1 மணித்தியாலம் 15 நிமிடம்

www.ikedu.lk



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 28

சுட்டெண் : ..... 30 நிமிடம்

333. மருந்து குடிப்பதற்காக நோயாளி ஒருவருக்கு வைத்தியர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தலை வழங்கினார். "ஒரு தடவையில் 2 வில்லைகள் வீதம் நாளொன்றுக்கு 3 தடவைகள் (சாப்பாட்டுக்குப் பின்னர்) எடுக்கவும்" நோயாளிக்கு 50 மருந்து வில்லைகள் தரப்பட்டுள்ளன. முதலாவது மருந்து வேளை காலை சாப்பாட்டுக்குப் பின்னர் எடுக்கப்பட்டதாயின், அம்மருந்து வில்லைகளின் எண்ணிக்கை எத்தனை முழு நாட்களுக்குப் போதுமானது?

(1) 8 (2) 9 (3) 25


334.

52	84
.....	.....

பெட்டியில் உள்ள இரு வெற்றிடங்களிலும் வரவேண்டிய இரு எண்களில் ஒன்று மற்றையதன் மூன்று மடங்காக உள்ளது. அந்நான்கு எண்களினதும் கூட்டுத்தொகை 200 ஆகும். வெற்றிடங்களில் இருக்க வேண்டிய எண்கள் யாவை?

(1) 16, 18 (2) 18, 54 (3) 19, 57

335. சிவப்பு, நீலம், செம்மஞ்சள், மஞ்சள், வெள்ளை என்னும் ஐந்து நிறக் கீற்றுக்களைக் கொண்ட ஒரு கொடி உருவில் தரப்பட்டுள்ளது.



- கொடியின் 4 ஆவது கீற்று வெள்ளை நிறமானது
- சிவப்பு நிறக் கீற்றிலிருந்து மூன்றாவதாக இருக்கும் கீற்று நீல நிறமானது
- செம்மஞ்சள் நிறக் கீற்றும் மஞ்சள் நிறக் கீற்றும் அடுத்தடுத்து இருப்பதில்லை

இதற்கேற்ப 1, 5 ஆகிய கீற்றுக்களுக்கு இருக்கக்கூடிய நிறங்கள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

(1) மஞ்சள், நீலம் (2) செம்மஞ்சள், நீலம் (3) சிவப்பு, செம்மஞ்சள்

336. 1 தொடக்கம் 30 வரையுள்ள எண்களில் அடுத்துள்ள இரண்டு எண்களைக் கூட்டும்போது

(1) ஓர் இரட்டை எண் கிடைக்கும்.

(2) ஓர் ஒற்றை எண் கிடைக்கும்.

(3) ஓர் இரட்டை அல்லது ஒற்றை எண் கிடைக்கும்.

337. 175, 125, 141, 132 என்னும் எண்களை ஏறுவரிசையில் எழுதும்போது கிடைக்கும் முதலாம் எண்ணினதும் மூன்றாம் எண்ணினதும் நடுவில் இருக்கும் இலக்கங்கள் முறையே,

(1) 2, 3 (2) 2, 4 (3) 7, 4

338. நீலாவிடம் ரூ. 100, ரூ. 50, ரூ. 20 நாணயத் தாள்களில் மாத்திரம் ரூ. 250 உண்டு. அவனிடம் உள்ள ரூ. 20 தாள்களின் எண்ணிக்கை யாது?

(1) 4 (2) 5 (3) 10

www.ikeou.lk

339. ♦ ஓர் இலக்கத்தை நினைத்துக் கொள்க.
♦ அதனை இரு மடங்காக்குக.
♦ அதிலிருந்து இரண்டைக் கழிக்க.
♦ இப்போது மூன்றினால் பெருக்குக.
♦ அதனை ஆறினால் வகுக்குக.
♦ அதனுடன் இரண்டைக் கூட்டுக.
கிடைக்கும் விடை நீர் முதலில் சிந்தித்த இலக்கத்திற்கு
(1) சமம் (2) ஒன்றினால் கூடியது (3) ஒன்றினால் குறைந்தது

340. "இருபத்தையாயிரத்து எண்ணூற்று இருபத்தொன்று" என்னும் எண்ணில் உள்ள இலக்கங்களைப் பின்னாலிருந்து முன்னால் எழுதும்போது கிடைக்கும் எண் யாது?
(1) 12825 (2) 82125 (3) 12852

● மூன்று பாடசாலைகளிலிருந்து ஒரு விழாவிற்கு வந்த ஆசிரியர்களுக்கும் பிள்ளைகளுக்கும் பின்வரும் நிறங்களையும் வடிவங்களையும் கொண்ட இலட்சினைகள் வழங்கப்பட்டன.

கம்பர் பாடசாலை	- நீலம்,	வள்ளுவர் பாடசாலை	- பச்சை
ஆசிரியர்கள்	- வட்டம்	ஆண்பிள்ளைகள்	- முக்கோணி
இளங்கோ பாடசாலை	- சிவப்பு	பெண் பிள்ளைகள்	- சதுரம்

341. கம்பர் பாடசாலையின் ஆண் பிள்ளைகளுக்குக் கிடைத்துள்ள இலச்சினை யாது?

(1) 

(2) 

(3) 

342. பச்சை நிறமுள்ள வட்டம் உள்ள இலச்சினை யாருக்குக் கிடைத்தது?
(1) கம்பர் பாடசாலையின் ஆசியர்களுக்கு
(2) இளங்கோ பாடசாலையின் ஆண் பிள்ளைகளுக்கு
(3) வள்ளுவர் பாடசாலையின் ஆசிரியர்களுக்கு

343. அருணன் இந்திரனிலும் உயரங் கூடியவன். சந்திரன் அருணனிலும் உயரங் குறைந்தவன். இதற்கேற்பச் சரியான கூற்று,
(1) இந்திரனிலும் சந்திரன் உயரங் கூடியவன்.
(2) இந்திரன், சந்திரன் ஆகிய இருவரிலும் உயரங் கூடியவர் எவரெனக் கூறுதல் கஷ்டம்.
(3) இந்திரனும் சந்திரனும் சம உயரம் உள்ளவர்கள்.

344. பின்வரும் இலக்கங்களின் மீது மையைப் பூசி, அவ்விலக்கங்கள் எதிரே அச்சிடப்படுமாறு புள்ளிக் கோடு வழியே தாளை இரண்டாக மடித்து, விரிக்கும்போது கிடைக்கும் எண் யாது?

801 ⋮

(1) **801801** (2) **801108** (3) **108801**

345. மூன்று மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை ஒலிக்கின்ற ஒரு கடிகாரம் உள்ளது. அது மு.ப. 7.00 இற்கு ஒலித்தது. அது அடுத்ததாக ஒலிக்கும் **இரண்டு** சந்தர்ப்பங்களைத் தருக.
(1) மு.ப. 10.00 உம் பி.ப. 1.00 உம் (2) மு.ப. 11.00 உம் பி.ப. 1.00 உம்
(3) மு.ப. 10.00 உம் பி.ப. 2.00 உம்

www.ikedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 29

சுட்டெண் : ..... 30 நிமிடம்

346. தரப்பட்ட மூன்று உருக்களில் ஓர் உரு மற்றைய இரு உருக்களிலிருந்தும் வேறுபட்டது. அவ்வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.

PE	**SN**	**AH**
(1)	(2)	(3)

347. கண்ணன் 14 விசுக்கோத்துப் பெட்டிகளைக் கடையில் வாங்கி வீட்டிற்குக் கொண்டு வரவேண்டி இருந்தது. அவன் ஒரு தடவை 4 விசுக்கோத்துப் பெட்டிகளை மாத்திரம் கொண்டு வரலாம். இதற்கேற்ப எல்லா விசுக்கோத்துப் பெட்டிகளையும் கொண்டு வருவதற்கு அவன் குறைந்த பட்சம் எத்தனை தடவை செல்ல வேண்டும்?

(1) 3 (2) 4 (3) 5

● **348, 349** ஆகிய வினாக்களுக்குப் பின்வரும் தகவல்களைக் கொண்டு விடை தருக.

2 வாழைப்பழங்களின் விலை ரூபாய் 30 ஆகும். ஒரு கொய்யாப்பழத்தின் விலை ஒரு வாழைப்பழத்தின் விலையிலும் பார்க்க ரூபாய் 5 இனால் கூடியது. ஒரு மாம்பழத்தின் விலை ஒரு கொய்யாப்பழத்தினதும் வாழைப்பழத்தினதும் விலைகளின் மொத்தத்திற்குச் சமம் எனின்,

348. ஒரு கொய்யாப்பழத்தின் விலை ரூபாய்

(1) 20 (2) 15 (3) 10

349. ஒரு மாம்பழத்தின் விலை ரூபாய்

(1) 35 (2) 40 (3) 45

350. அடைப்பில் உள்ள மிகச் சிறிய ஒற்றை எண்ணை மிகப் பெரிய இரட்டை எண்ணால் பெருக்கும்போது கிடைக்கும் விடை யாது?

(1) 90 (2) 58 (3) 50

6	5	4	23	15
7	19	33	8	3
10	2	30	17	29

351. 10 படிகள் உள்ள ஒரு படிக்கட்டில் A முதல் படியிலும் B பத்தாம் படியிலும் நிற்கின்றனர். A ஒரு படிகள் ஏறும்போது B இரு படிகள் இறங்கினால், அவர்கள் இருவரும் எத்தனையாவது படியில் சந்திப்பர்?

(1) 4 (2) 5 (3) 6

352. மோகனும் ரவியும் ஒரு வட்ட ஓட்டப் பந்தயப் பாதையில் ஓட்டத்தை ஆரம்பித்தனர். ரவி அரைச் சுற்று ஓடும்போது மோகன் ஒரு சுற்றை ஓடி முடித்து முன்னோக்கி வந்து ரவியைக் கடந்தான். இதற்கேற்ப,

(1) மோகனின் கதி ரவியின் கதியின் மூன்று மடங்காகும்.

(2) மோகனின் கதி ரவியின் கதியின் இருமடங்காகும்.

(3) ரவியின் கதி மோகனின் கதியின் மூன்று மடங்காகும்.

www.ikedu.lk

353. பிழையான கோவையைத் தெரிவு செய்க.

(1) 6 X 6 - 6 = 30 (2) 5 X 5 + 5 = 30 (3) 33 - 33 - 3 = 30

354. சரியான கோவையைத் தெரிவு செய்க.

(1) 888 + 88 + 88 + 8 + 8 = 1000

(2) 888 + 88 + 8 + 8 + 8 = 1000

(3) 888 + 88 + 88 + 8 + 8 + 8 = 1000

● ஒரு நிரையில் கண்ணன் தொடக்கத்திலிருந்து 12 ஆவதாக நிற்கின்றான். அவன் கடைசியிலிருந்து 8 ஆவதாக நிற்கின்றான். இதற்கேற்ப,

355. நிரையில் எத்தனை நபர்கள் நிற்கின்றனர்?

(1) 19 (2) 20 (3) 21

356. அந்நிரையில் மோகன் தொடக்கத்திலிருந்து 5 ஆவதாக நின்றால், அவனுக்குப் பின்னால் எத்தனை நபர்கள் நிற்கின்றனர்?

(1) 16 (2) 15 (3) 14

● ஒரு போட்டியில் மூன்று சுற்றுக்களில் ஐந்து விளையாட்டு வீரர்கள் விளையாடிய விதங்கள் கீழே உள்ளன.

	சமன்	கமல்	கணேஷ்	ஹசன்	சேகர்
முதல் சுற்று	−	+	+	0	+
இரண்டாம் சுற்று	0	0	0	−	+
மூன்றாம் சுற்று	+	−	+	0	−

நல்லது = +

சராசரி = 0

குறைவு = −

357. முழுப் போட்டியிலும் நன்றாக விளையாடியவர்

(1) கணேஷ் (2) சேகர் (3) சமன்

358. போட்டியில் கமலிலும் பார்க்க நன்றாக விளையாடிய விளையாட்டு வீரர்

(1) சமன் (2) சேகர் (3) ஹசன்

359. உட்பக்கம் தெரியாத பெட்டி ஒன்றில் மூன்று நீலநிறப் பேனைகளும் மூன்று கறுப்பு நிறப் பேனைகளும் உள்ளன. பேனைகளைப் பார்க்காமல் ஒரே நிறத்திலான இரு பேனைகளைத் தவறாமல் பெறுவதற்குப் பெட்டியிலிருந்து வெளியே எடுக்கப்பட வேண்டிய பேனைகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை யாது?

(1) 2 (2) 3 (3) 4

360. ஒரு விழாவிற்காகச் சில மாகாணங்களிலிருந்து வந்த பிள்ளைகளுக்கு வடிவத்திலும் நிறத்திலும் வேறுபட்ட இலட்சினைகள் வழங்கப்பட்டன.

மத்திய மாகாணம்	- நீல நிறம்
வட மாகாணம்	- மஞ்சள் நிறம்
தென் மாகாணம்	- சிவப்பு நிறம்

ஆண் பிள்ளைகள்	- வட்டம்
பெண் பிள்ளைகள்	- நாற்பக்கல்

இதற்கேற்ப சரியான கூற்று யாது?

(1) வடமாகாணத்தின் பெண் பிள்ளைகள் நீலநிற நாற்பக்கல்களை அணிந்திருந்தனர்.

(2) மத்திய மாகாணத்தின் ஆண் பிள்ளைகள் நீலநிற வட்டங்களை அணிந்திருந்தனர்.

(3) தென் மாகாணத்தின் பெண் பிள்ளைகள் மஞ்சள்நிற நாற்பக்கல்களை அணிந்திருந்தனர்.

www.ikeou.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 30

சுட்டெண் : ..... 30 நிமிடம்

361. ஒரு பேருந்து, ஒரு லொறி, ஒரு மோட்டார்க் கார் ஆகியன 150 கிலோமீற்றர் தூரம் செல்வதற்கு ஒரே இடத்திலிருந்து புறப்பட்டன. அவை புறப்பட்ட நேரங்களும் சென்ற கதிகளும் கீழே காணப்படுகின்றன.

வாகனம்	புறப்பட்ட நேரம்	கதி (மணித்தியாலத்துக்கு கிலோமீற்றர்)
பேருந்து	காலை 6.00	50
லொறி	காலை 7.00	30
மோட்டார்க் கார்	காலை 8.00	75

அவை சேர வேண்டிய இடத்தை என்ன ஒழுங்குமுறையில் அடைந்தன?

(1) மோட்டார்க் கார், பேருந்து, லொறி

(2) பேருந்து, லொறி, மோட்டார்க் கார்

(3) பேருந்து, மோட்டார்க் கார், லொறி

362. குகனிடம் இரண்டு ரூபாய் நாணயங்களாகவும் ஐந்து ரூபாய் நாணயங்களாகவும் ரூ. 23 உள்ளது. அதில் இருக்கத்தக்க இரண்டு ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கை யாது?

(1) 3 (2) 4 (3) 6

363. நிமலன் திங்கட்கிழமையிலும் பார்க்க ரூ. 10 குறைவாகச் செவ்வாய்க் கிழமையிலும் செவ்வாய்க் கிழமையிலும் பார்க்க ரூ. 5 குறைவாகப் புதன்கிழமையிலும் செலவு செய்தான். அவன் செவ்வாய்க்கிழமை ரூ. 30 ஐச் செலவு செய்தால், மூன்று நாட்களிலும் செலவு செய்த மொத்தப் பணம்?

(1) ரூ. 75 (2) ரூ. 90 (3) ரூ. 95

● ரூ. 453.18 ஐக் குறியீடுகளில் R.CFD.BG எனக் காட்டலாம் எனின்,

364. ரூ. 1853.34 ஐ எவ்வாறு காட்டலாம்?

(1) R.AHEC.CD (2) R.BGFD.DC (3) R.BGFD.BG

365. R.ABCD.EF இனால் காட்டப்படுவது யாது?

(1) ரூ.1234.56 (2) ரூ.2134.65 (3) ரூ.2143.65

366. இரு பகுதிகளும் சமமாக இருக்கும் நிரையைத் தெரிவு செய்க.

(1) 3446758 - 3447658 (2) NMWAY - MNWAY

(3) 3Y2BRR - 3Y2BRR

367. ஓர் ஓட்டப் போட்டியில் 5 பிள்ளைகள் போட்டியை முடித்த விதம் பின்வருமாறு

குமார் - 5 நிமிடம் மோகன் - 8 நிமிடம்

பிரசாந்தன் - போட்டியை முடிக்கவில்லை சந்திரன் - 4 நிமிடம்

சேகர் - 6 நிமிடம்

அவர்கள் வெற்றிக் கம்பத்தை அடைந்த ஒழுங்குமுறை யாது?

(1) சந்திரன், குமார், சேகர், மோகன் (2) மோகன், சேகர், குமார், சந்திரன்

(3) சந்திரன், பிரசாந்தன், குமார், மோகன்

www.lkedu.lk

368. முரளி ரவிக்கு முன்னரே விளையாட்டு மைதானத்திற்கு வந்த அதே வேளை ரவிக்குப் பின்னரே மைதானத்திலிருந்து வெளியேறினான். மோகன் ரவிக்குப் பின்னரே மைதானத்திற்கு வந்த அதேவேளை முரளிக்கு முன்னரே மைதானத்திலிருந்து வெளியேறினான். கூடுதலான நேரம் மைதானத்தில் இருந்தவர் யார்?

(1) மோகன் (2) முரளி (3) ரவி

369. தந்தையார் மாம்பழத்தையும் அன்னாசிப்பழத்தையும் விரும்புகின்ற போதிலும் தோடம்பழத்தை விரும்புவதில்லை. தாயார் தோடம்பழத்தையும் மாம்பழத்தையும் விரும்புகின்ற போதிலும் அன்னாசிப்பழத்தை விரும்புவதில்லை. நான் விளாம்பழத்தையும் மாம்பழத்தையும் விரும்புகிறேன். நாம் மூவரும் விரும்பும் பழம்?

(1) விளாம்பழம் (2) தோடம்பழம் (3) மாம்பழம்

370. தாயார் தன்னிடத்தில் இருந்த பணத்தில் 1/2 ஐப் பங்கைப் புத்தகங்கள் வாங்கச் செலவழித்தார். அதன் பின்னர் அவர் மீதிப் பணத்தை இருசம பகுதிகளாகப் பிரித்து அவற்றில் ஒரு பகுதியை ஆடைகள் வாங்கச் செலவழித்தார். பின்னர் அவரிடம் எஞ்சியிருந்த பணம் ரூ. 50 எனின், அவர் புத்தகங்கள் வாங்கச் செலவழித்த பணம் யாது?

(1) ரூ. 50 (2) ரூ. 100 (3) ரூ. 200

371. 200 அரைவாசியின் 1/4 உடன் 5 ஐக் கூட்டும்போது கிடைக்கும் எண் யாது?

(1) 25 (2) 30 (3) 35

372. 41 தொடக்கம் 45 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும் போது இலக்கம் 4 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 4 (2) 5 (3) 6

- நிமலன், கமலன் அகிய இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 60kg எனவும்
  கமலன், அமலன் ஆகிய இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 64kg எனவும்
  நிமலன், கமலன், அமலன் ஆகிய மூவரினதும் நிறைகளினதும் கூட்டுத்தொகை 98kg எனவும்
  தரப்பட்டிருப்பின்,

373. அமலனின் நிறை யாது?

(1) 30kg (2) 34kg (3) 38kg

374. நிமலன், அமலன் ஆகிய இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை யாது?

(1) 68kg (2) 72kg (3) 76kg

375. 2kg அரிசியின் விலை = 1kg பருப்பின் விலை
2kg பருப்பின் விலை = 1kg மிளகாயின் விலை
எனின், பின்வரும் அட்டவணைக்கேற்பக் கூடுதலான பணத்தைக் கொடுக்க வேண்டியவர் யார்?

விஜய்	கமலா	சிறில்	பாலா
2kg அரிசி	4kg அரிசி	1kg அரிசி	2kg அரிசி
1kg பருப்பு	2kg பருப்பு	2kg பருப்பு	1kg பருப்பு
1kg மிளகாய்	1kg மிளகாய்	2kg மிளகாய்	2kg மிளகாய்

(1) விஜய் (2) கமலா (3) சிறில்

www.ikeu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 31

சுட்டெண் : ..... 30 நிமிடம்

376. 1 போத்தல் நீரின் நிறை = 2 பால்மா பைக்கற்றுக்களின் நிறை

1 பால்மாப் பைக்கற்றின் நிறை = 2 தேயிலைப் பைக்கற்றுகளின் நிறை

அவ்வாறாயின், எந்தப் பையில் கூடுதலாக நிறை உள்ளது?

(1)	(2)	(3)
1போத்தல் நீர் 4பைக்கற்று தேயிலை	1போத்தல் நீர் 3பைக்கற்று தேயிலை	2போத்தல் நீர் 3பைக்கற்று தேயிலை

● பின்வரும் தகவல்களைக் கொண்டு **378, 379** ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

1kg சீனி + 250g தேயிலை ரூபாய் 180	250g தேயிலை + 500g விசுக்கோத்து ரூபாய் 230

1kg சீனி + 500g விசுகோத்து
ரூபாய் 170

377. 500g தேயிலை + 1kg விசுகோத்து இன் விலை யாது?

(1) ரூ. 400 (2) ரூ. 410 (3) ரூ. 460

378. 2kg சீனி + 500g தேயிலை + 1kg விசுகோத்து இன் விலை யாது?

(1) ரூ. 350 (2) ரூ. 410 (3) ரூ. 580

379. ஒரு விளையாட்டு மைதானத்தில் உள்ள 10 பேர்களிடையே 7 பேர் குடையைப் பிடித்துக் கொண்டும் 6 பேர் தொப்பியை அணிந்து கொண்டும் இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் குடையைப் பிடித்துக் கொண்டோ, தொப்பியை அணிந்து கொண்டோ இருக்கின்றனர். சிலர் தொப்பியை அணிந்து கொண்டும் குடையைப் பிடித்துக்கொண்டும் இருக்கின்றனர். அவ்வாறு தொப்பியை அணிந்து கொண்டும் குடையைப் பிடித்துக்கொண்டும் இருப்பவர்களின் எண்ணிக்கை யாது?


(1) 3 (2) 6 (3) 7


380.  என்னும் குறியீட்டைப் பயன்படுத்திக் கடகம் என்னும் சொல் எழுதப்பட்டிருந்தது.

அதற்கு ஏற்ப  என்னும் குறியீட்டினால் காட்டப்படும் சொல் யாது?

(1) கடம் (2) படம் (3) வடம்


● **381** ஆம் **382** ஆம் வினாக்களுக்குப் பின்வரும் அடைப்பில் தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி விடையைத் தெரிவு செய்க.





381.  எதற்குச் சமம்?

(1) 800ml (2) 1000ml (3) 1600ml

382. பின்வருவனவற்றில் மிகவும் சரியான தொடர்பு யாது?

(1) 

(2) 

(3) 


383. ஒரு வீதியில் இரு மின்கம்பங்களுக்கிடையே 2 கொடிகள் வீதம் தொங்கவிட்டு அவ்வீதியை அலங்கரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. வீதியில் 8 மின்கம்பங்கள் இருந்தால், அவற்றுக்கிடையே தொங்கவிடுவதற்கு எத்தனை கொடிகள் தேவை?

(1) 14 கொடிகள் (2) 16 கொடிகள் (3) 18 கொடிகள்

384. ஒரு பேருந்தில் உள்ள ஆண் பயணிகளின் எண்ணிக்கை அதில் உள்ள பெண் பயணிகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும். அடுத்த தரிப்பிடத்தில் 4 பெண்கள் பேருந்தில் ஏறிய பின்னர் ஆண்களின் எண்ணிக்கையும் பெண்களின் எண்ணிக்கையும் சமமாகும். இப்போது பேருந்தில் உள்ள பயணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 8 (2) 12 (3) 32

● உருவில் ஒவ்வொரு பக்கத்திலும் நிற மை பூசப்பட்டுள்ள ஒரு திண்ம மரக்குற்றி தரப்பட்டுள்ளது. அதனை முறிந்த கோடுகள் வழியே வெட்டி, பல சிறிய மரக்குற்றிகள் பெறப்பட்டன. அதனைக் கொண்டு **385, 386** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.



385. முறிந்த கோடு வழியே வெட்டும் போது எத்தனை சிறிய மரக்குற்றிகள் கிடைக்கும்?

(1) 21 (2) 36 (3) 42

www.ikeau.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021

அறிவுத்தாரகை 5


செயலட்டை - 32


சுட்டெண் : ..... 30 நிமிடம்

386. ஒரு பக்கத்தில் மாத்திரம் நிற மை பூசப்பட்டுள்ள எத்தனை சிறிய மரக் குற்றிகள் கிடைக்கும்?

(1) 8 (2) 10 (3) 12


387. வெறுமையாயுள்ள அடைப்புக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.





(1) (2) (3)

388. வெறுமையாயுள்ள அடைப்புக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.





(1) (2) (3)


389. பின்வரும் வரிப்படத்திற்கு ஏற்ப இரு வெற்றிடங்களுக்கும் பொருத்தமான இரு உருக்களும் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

F ⟶ ꟻ எனின் P ⟶ .....


E ⟶ Ǝ எனின் C ⟶ .....

(1) ꟻ உம் Ɔ உம் (2) P உம் Ɔ உம் (3) P உம் Ɔ உம்

390. உருவில் நான்கு ஈர்க்குத் துண்டுகள் உள்ளன.



அந்த நான்கு ஈர்க்குத் துண்டுகளையும் பயன்படுத்தி அமைக்கத்தக்க வடிவத்தைக் காட்டும் உரு யாது?



(1) (2) (3)

www.lkedu.lk

391. ஒரு பிள்ளை நாற்றுமேடையிலிருந்து வாங்கிய மரக்கன்றுகள் பற்றிய பின்வரும் விவரத்தை முன்வைத்தான்.

பழமரக் கன்றுகள் - 10		பழமரமல்லாத கன்றுகள் -	12
மாங் கன்றுகள் - 2		தென்னங் கன்றுகள் -	4

இதன்படி அவன் வாங்கிய மொத்த மரக் கன்றுகள் எத்தனை?

(1) 16 (2) 22 (3) 28

● பின்வரும் விவரத்தை வாசித்து **392** ஆம் **393** ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.

1 கிலோகிராம் சீனியும் 500 கிராம் தேயிலையும்	ரூ. 175
1 கிலோகிராம் சீனியும் 400 கிராம் பால்மாவும்	ரூ. 155
1 கிலோகிராம் சீனி	ரூ. 35
500 கிராம் தேயிலையும் 1 கிலோகிராம் விசுகோத்தும்	ரூ. 220

392. 1 கிலோகிராம் விசுகோத்தின் விலை என்ன?


(1) ரூ. 220 (2) ரூ. 80 (3) ரூ. 45

393. 800 கிராம் பால்மாவின் விலை என்ன?


(1) ரூ. 120 (2) ரூ. 155 (3) ரூ. 240


● **394** ஆம் **395** ஆம் வினாக்களில் காட்டப்பட்டுள்ள அடைப்புக்களில் உள்ள ஒவ்வொரு உருவுக்கும் ஒவ்வொரு முழுவெண் பெறுமானம் தரப்பட்டுள்ளது. அப்பெறுமானங்களின் கூட்டுத்தொகை நிரையாகவும் நிரலாகவும் தரப்பட்டுள்ளது.

394. - ? - குறியினால் காட்டப்படும் இடத்தில் வரவேண்டிய எண் யாது?



(1) 12
(2) 15
(3) 19

395. உரு  இற்குத் தரப்பட்டுள்ள பெறுமானம் யாது?



(1) 1
(2) 3
(3) 5

www.ikedu.lk

01. 1	**02.** 3	**03.** 1	**04.** 2	**05.** 1
06. 3	**07.** 2	**08.** 2	**09.** 3	**10.** 3
11. 3	**12.** 1	**13.** 1	**14.** 2	**15.** 3
16. 1	**17.** 3	**18.** 2	**19.** 2, 1	**20.** 1
21. 2	**22.** 1	**23.** 1	**24.** 2	**25.** 1
26. 1	**27.** 3	**28.** 2	**29.** 1	**30.** 2
31. 1, 2	**32.** 1	**33.** 1	**34.** 2	**35.** 1, 2
36. 3	**37.** 1	**38.** 3	**39.** 3	**40.** 1
41. 3	**42.** 2	**43.** பொ.விடை	**44.** பொ.விடை	**45.** 1
46. 2	**47.** 2	**48.** 1	**49.** 3	**50.** 2
51. 2	**52.** 1	**53.** ∞	**54.** ∞	**55.** பணம்
56. கரம்	**57.** 3	**58.** 2	**59.** வங்கி	**60.** கடிதம்
61. சூரியன்	**62.** விசிறி	**63.** 1	**64.** 2	**65.** 3
66. 2	**67.** 3	**68.** 1	**69.** 1	**70.** 3
71. 3	**72.** 3	**73.** 2	**74.** 3	**75.** 3
76. 3	**77.** 1	**78.** 2	**79.** 2	**80.** 3
81. 3	**82.** 1	**83.** 3	**84.** 3	**85.** 2
86. 3	**87.** 1	**88.** 3	**89.** 2	**90.** 1
91. 2	**92.** 3	**93.** 3	**94.** 2	**95.** 1
96. 2	**97.** 3	**98.** 3	**99.** 3	**100.** 1
101. 2	**102.** 3	**103.** 2	**104.** 3	**105.** 2
106. 1	**107.** 1	**108.** 2	**109.** 3	**110.** 1
111. 2	**112.** 3	**113.** 3	**114.** விமானம்	**115.** மருந்து
116. பொ.விடை	**117.** பொ.விடை	**118.1**	**119.** 2, 3	**120.** 2
121. 1	**122.** 3	**123.** 2	**124.** 3	**125.** 2
126. 1	**127.** பொ.விடை	**128.** பொ.விடை	**129.** 3	**130.** 6
131. (7)	**132.** 5	**133.** X	**134.** 3	**135.** 3
136. 2	**137.** 3	**138.** 1	**139.** 2	**140.** 2
141. 1	**142.** 2	**143.** 1	**144.** 2	**145.** 2
146. 3	**147.** 3	**148.** 2	**149.** 3	**150.** 1
151. 2	**152.** 1	**153.** 3	**154.** 1	**155.** 2
156. 1	**157.** 3	**158.** 3	**159.** 2	**160.** 3
161. 2	**162.** 1	**163.** 2	**164.** 2	**165.** 2
166. 1	**167.** 2	**168.** 3	**169.** 3	**170.** 2
171. 2	**172.** 3	**173.** பொ.விடை	**174.** 1	**175.** 2
176. 2	**177.** 2	**178.** 2	**179.** 3	**180.** 3

www.lkedu.lk

181. 3	182. X	183. ✓	184. ✓	185. X
186. 2	187. 3	188. 3	189. 2	190. 2
191. 2	192. 3	193. 2	194. 1	195. 3
196. 4	197. 2	198. 2	199. 2	200. 3
201. 2	202. 3	203. 3	204. 2	205. 2
206. 3	207. 2	208. 3	209. 2	210. 3
211. 2	212. 3	213. 3	214. 1	215. 3
216. 2	217. 3	218. 3	219. 2	220. 1
221. 2	222. 3	223. 3	224. 2	225. 1
226. 3	227. 3	228. 3	229. 1	230. 1
231. 1	232. 3	233. 3	234. 3	235. 3
236. 3	237. 1	238. 3	239. 1	240. 2
241. 1	242. 3	243. 2	244. 1	245. 2
246. 1	247. 2	248. 1	249. 2	250. 3
251. 1	252. 2	253. 1	254. 1	255. 1
256. 3	257. 1	258. 1	259. 2	260. 2
261. 3	262. 1	263. 1	264. 3	265. 1
266. 2	267. 3	268. 3	269. 2	270. 1
271. 2	272. 2	273. 3	274. 3	275. 2
276. 3	277. 3	278. 2	279. 2	280. 2
281. 1	282. 3	283. 2	284. 2	285. 2
286. 3	287. 3	288. 3	289. 3	290. 2
291. 1	292. 2	293. 3	294. 3	295. 3
296. 2	297. 3	298. 2019	299. 2008	300. 3
301. 1	302. 2	303. 3	304. 1	305. 3
306. 1	307. 3	308. 1	309. 1	310. 1
311. ர்	312. 2	313. 1	314. 3	315. 3
316. 3	317. 3	318. 3	319. 2	320. 1
321. 1	322. 2	323. 2	324. 3	325. 3
326. 1	327. 2	328. 1	329. 2	330. 3
331. 1	332. 1	333. 1	334. 1	335. 3
336. 2	337. 2	338. 2	339. 2	340. 3
341. 3	342. 3	343. 2	344. 2	345. 1
346. 3	347. 2	348. 1	349. 1	350. 1
351. 1	352. 1	353. 3	354. 2	355. 1
356. 3	357. 1	358. 2	359. 2	360. 2

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

361. 3	362. 2	363. 3	364. 2	365. 3
366. 3	367. 1	368. 2	369. 3	370. 3
371. 2	372. 3	373. 3	374. 2	375. 3
376. 3	377. 3	378. 3	379. 1	380. 2
381. 3	382. 1	383. 2	384. 1	385. 2
386. 2	387. 2	388. 3	389. 1	390. 1
391. 2	392. 2	393. 1	394. 1	395. 2

எதிர்வரும் (2021 - 11 - 14) புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெற்று சித்தியடைய வாழ்த்துக்கள்.

என்றும் உண்மையுள்ள ஆசான்,
ஆசிரியர் : ஏ.எம்.சனூஸ்



www.kedu.lk